# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2497 - 2026 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2026.07.10

2497 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 5 |


**கவனிக்க.**- சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2026.04.24 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82796- 403 (2026/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ்

**பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் (ஆண் / பெண்) பதவி**

**(துணைச் சேவைகளின் கீழ் மற்றும் மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில்)**

இலங்கை பொலிஸின் துணைச் சேவைகளின் கீழ் மற்றும் மாற்றுப்பணியமர்த்தல்அடிப்படையில்(அரசாங்கசேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் (ஆண் /பெண்) பதவிக்குக் நியமிப்ப தற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ) குளிர்சாதனப் பெட்டி மற்றும் அதிகுளிரூட்டி திருத்துநர் (ஆண்)

ஆ) குளிர்படுத்தி திருத்துநர் (ஆண்)

இ) பொது மக்கள் தொடர்புசாதன செயற்படுத்துநர் (ஆண்)

ஈ) மின்சாதன ஒட்டுநர் (ஆண்)

உ) மோட்டர் இயக்குநர் (ஆண்)

ஊ) இலத்திரனியல் திருத்துநர் (ஆண்)

எ) திருத்துநர் (ஆண்)

ஏ) டோசர் இயக்குநர் (ஆண்)

ஐ) குசன் வேலையாள் (ஆண்)

ஒ) உருக்கியொட்டுநர் (ஆண்)

ஓ) அலுமினிய வேலையாள் (ஆண்)

ஔ) கணினி இயக்குநர் (ஆண்)

க) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

கா) பொறித்தொகுதி இயக்குநர் (ஆண்)

கி) தையல் இயந்திரம் திருத்துநர் (ஆண்)

கீ) துப்பாக்கி திருத்துநர் (ஆண்)

கு) அன்டனா பொருத்துநர் (ஆண்)

கூ) கட்டுடம்புப் பயிற்சிப் போதனாசிரியர் (ஆண்)

கெ) டோசர் இயந்திரம் திருத்துநர் (ஆண்)

கே) நீச்சல் தடாகப் போதனாசிரியர் (ஆண்)

கை) உலோக ஒட்டுநர் (ஆண்)

கொ) மேடை அலங்கரிப்பு நிபுணர் (ஆண்)

கோ) ஒப்பனையாளர் (ஆண் / பெண்)

கௌ) உடற்பயிற்சிப் போதனாசிரியர் (ஆண் / பெண்)

ச) ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளர் (ஆண்)

02. www.police.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவே சித்து, "join us" என்ற தெரிவை அழுத்துவதன் மூலமாக அல்லது பின்வரும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமாக விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, இணையவழி முறையூடாக மாத்திரமே விண்ணப்பங்களை நிறைவு செய்து 2026.08.14 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு விண்ணப்பப் படிவமும் தபால் மூலம் அனுப்பப்படக் கூடாது. இணையவழி முறையூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை, ஆரம்பப் பரிசோதனைக்கு சமுகமளிக்கும் போது விண்ணப்பதாரர் தம்மோடு எடுத்துவர வேண்டும். (அப்பிரதியில் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை இட்டிருத்தல் வேண்டும்).

(அ) இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கமற்ற தன்மைகள் காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது எனக் கருதிச் செயற்படுதல் வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதானது, நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

(இ) இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பான தீர்மானம் என்னால் மேற்கொள்ளப்படும்.

(ஈ) பதவியில் காணப்படும் வெற்றிடங்களின் அடிப் படையில் முன்னுரிமை வரிசைக்கு அமைய ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றதன் பின்னர், இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படும்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறும் வரிசைக் கிரமத்திற்கு அமைய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப் படும்.

03. **சம்பளத் திட்டம் :** (மாதாந்தம்) பொலிஸ் கொஸ்தாபல் பதவி (துணைச் சேவைகள்)

ரூபா 49,550 - 7x540 - 27x670 - ரூபா 71,420.00 (ரூபா 01- 2025)

இந்தச் சம்பளக் கணிப்பீடு பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இற்கு அமைய மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சம்பள அளவீட்டுக்கு மேலதிகமாக, பின்வரும் கொடுப்பனவுகள் அவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படைச் சம்பளம்: | ரூபா 49,550.00 |
| (ஆ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு: | ரூபா 17,800.00 |
| (இ) | அடிப்படைச் சம்பளத்தின் 22% + ரூபா 1,250.00: | ரூபா 12,151.00 |
| (ஈ) | உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு: | ரூபா 28,800.00 (பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை இலக்கம் 2773/2024 இற்கு அமைய) |
| (உ) | கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு: | ரூபா 2,000.00 |

04. **அடிப்படைத் தகைமைகள்:**

4:1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் ஊடக மொழி பாடம் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இரண்டு அமர்வுகளில் சித்தியெய்தும் ஒரு பரீட்சார்த்தி முதற்தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு 01: இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கு அமைய, பாட இலக்கங்கள் 41, 44 ஐக் கொண்ட இரட்டை விஞ்ஞான பாடங்களுள் ஒரு பாடமாகவும், இலக்கங்கள் 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித இரட்டை பாடங்களுள் ஒரு பாடமாகவும் கருதிப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

குறிப்பு 02: க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையின் தொழில்நுட்பப் பாடத்தின் எழுத்துப் பரீட்சையில் சித்தியடையத் தவறுதலானது, அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதிலும், அப்பாடத்தில் சித்தியடையாததாகவே கருதப்படும்.

குறிப்பு 03: விருப்பத் தேர்வுக்குரிய பாடங்களான தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களப் பாடங்கள் க.பொ.த. (சாதாரண தர) பாடத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாததால், அப்பாடங்களில் சித்தியடைவதானது க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு பாடமாகக் கணிக்கப்படமாட்டாது.

4:2 **தொழிற்துறைத் தகைமைகள் :**

- இலக்கம் 01 இன் (அ) இலிருந்து (கீ) வரையான மற்றும் (கொ) ஆகிய பதவிகளுக்காக அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பாடத்திற்குத் தொடர்புடைய சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து (NVQ Level 3) சான்றிதழைப் பெற்றிருத்தல்.
- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத பாடத்தொடர்புடைய பயிற்சிப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.
- குறைந்தது 03 வருட கால தொழிற்துறை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அன்டனா பொருத்துநர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவன மொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத பாடத்தொடர்புடைய பயிற்சிப் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**கட்டுடம்புப் பயிற்சிப் போதனாசிரியர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக உடற்கட்டுப் பயிற்சிப் போதனை தொடர்பான பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**டோசர் இயந்திரம் திருத்துநர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் பாடத்திற்குத் தொடர்புடைய சான்றிதழ் பாட நெறியொன்றைப் பூர்த்தி செய்து (NVQ Level 03) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**நீச்சல் தடாகப் போதனாசிரியர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக நீச்சல் தடாகப் போதனை தொடர்பான பாட நெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**உலோக ஒட்டுநர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து (NVQ Level 03) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**ஒப்பனையாளர்**

- i. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒப்பனை மற்றும் அங்கிங்கலங்காரம் (Facial and Make-up) தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

**உடற்பயிற்சிப் போதனாசிரியர்**

- அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உடற் பயிற்சிப் போதனை தொடர்பான பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது விளையாட்டுத்துறை டிப்ளோமா (Diploma in Sports) ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளர்**

- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒலிபரப்புக் கட்டுப்பாடு தொடர்பாக பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4:3 **அனுபவம் :**

இலக்கம் 01 இன் (அ) இலிருந்து (கீ) வரையான பதவிகளுக்காக:

அரசாங்க அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய துறையில் தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**அன்டனா பொருத்துநர்:**

அரசாங்க அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய துறையில் தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**கட்டுடம்புப் பயிற்சிப் போதனாசிரியர்:**

உடற்கட்டுப் பயிற்சிப் போதனாசிரியராகக் கடமையாற்றிய 02 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**டோசர் இயந்திரம் திருத்துநர்:**

அரசாங்க, அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய துறையில் (NVQ Level 03) தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**நீச்சல் தடாகப் போதனாசிரியர்:**

நீச்சல் தடாகப் போதனாசிரியராகக் கடமையாற்றிய 02 வருட கால தொழிற்துறை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உலோக ஒட்டுநர்:**

அரசாங்க, அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய (NVQ Level03)துறையில்தொழிற்துறைத்தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**மேடை அலங்கரிப்பு நிபுணர்:**

மேடை அலங்கரிப்புத் துறையில் 01 வருட கால அனுபவமும் திறமையும் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**ஒப்பனையாளர்:**

அரசாங்க அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**உடற்பயிற்சிப் போதனாசிரியர்:**

உடற்பயிற்சிப் போதனாசிரியராகக் கடமையாற்றிய 02 வருட கால தொழிற்துறை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளர்:**

அரசாங்க அல்லது பொலிஸ் மா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், தொடர்புடைய துறையில் தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தது 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

4:4 **உடற் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் (ஆண்/ பெண்) இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடற்தகுதி மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4:5 **ஏனையவை :**

4:5:1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4:5:2 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸாரினால் எதிர்பார்க்கப்படும் நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4:5:3 திருமணமான / திருமணமாகாத (ஆண் / பெண்) எவரும் விண்ணப்பிக்கலாம்.

4:5:4 தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

4:5:5 ஆண் - உயரம் 05 அடி 02 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

பெண் - உயரம் 05 அடிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(விசேட தகைமைகள் மற்றும் திறமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பில், பொலிஸ் மா அதிபரின் விருப்பத்திற்கமைய இந்த உயர கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம்)

4:5:6 **கண்பார்வை தொடர்பான தேவைப்பாடுகள்:** ஒரு கண்ணின் பார்வைத் திறன் 6/12 இற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வைத் திறன் 6/6 ஆக இருக்கும் போது மற்றைய கண்ணின் பார்வைத் திறன் 6/18 ஆகக் காணப்படின் அதுவும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப் பார்வை சாதாரணமானதாக இருத்தல் வேண்டும்.

4:5:7 செயற்கையான உடல் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது. (உதாரணம்: பச்சை குத்தியிருத்தல்)

4:5:8 பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப் பட்டுள்ள திகதியன்று அனைத்து வழிகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு 01: பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தேவையான 4:1 மற்றும் 4:4 ஆகிய தகைமைகளை விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், 4:2 மற்றும் 4:3 ஆகிய தகைமைகள் நியமனம் வழங்கப்படும் திகதியன்றும் அதே முறையில் காணப்படல் வேண்டும்.

குறிப்பு 02: மேற்கூறப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக, சர்வதேச மட்டத்திலான, தேசிய மட்டத்திலான அல்லது விசேட விளையாட்டுத் திறமைகளைக் கொண்ட அல்லது ஏனைய துறைகளில் தனித்துவமான திறமைகளை அல்லது தேர்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு தொடர்பான தகைமைகளைக் கருதாது, ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், நியமன அதிகாரியின் விருப்பத்திற்கமைய அவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும்.

4:6 **வயது :**

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 - 32 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

05. **இணைப்புச் செய்யும் முறை :**

5:1 **ஆரம்பப் பரிசோதனை:**

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே ஆரம்பப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். இப்பரிசோதனையின் போது மேலே 4:1 இலிருந்து 4:6 வரையான தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

5:2 **உடற்தகுதிப் பரிசோதனை:**

பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் விண்ணப்பதாரர்கள் உடற்தகுதிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

5:3 இப்பரிசோதனையில் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

06. **கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 | பொருத்தமற்றது |
| 02. தொழிற்துறைத் தகைமைகள் | 20 | |
| 03. தொழிற்துறை அனுபவம் | 20 | |
| 04. மொழி அறிவு (ஆங்கிலம் / தமிழ்) | 20 | |
| 05. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 15 | |
| மொத்தம் | 100 | 40% |

குறிப்பு:

01. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் அதே சந்தர்ப்பத்திலேயே தகைமைகளைப் பரிசீலித்தலும் மேற்கொள்ளப்படும்.

02. ஆரம்பப் பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், அதில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

07. **எழுத்துப் பரீட்சை:**

| *விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் திறன் | 100 | 40% |
| 02. பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சையும் | 100 | 40% |
| 03. தொழிற்றுறைக்கான -<br>எழுத்துமூல பரீட்சை<br>செயன்முறை பரீட்சை | 40<br>100<br>60 | ஒவ்வொரு பகுதியிலிருந்தும் 40% வீதம் |

7.1 கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் எண்ணிக்கையானது, எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் எண்ணிக்கையுடன் கூட்டப்பட்டு விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

7.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய, பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் வரிசைக்கிரமப்படியான திறமைச் சித்தியாளர் பட்டியலின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

08. **விண்ணப்பதாரரின் பின்னணி பற்றிய பரிசீலனை :**

8:1 மேலே 7.2 ஆம் பந்தியின்படி ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரரின் பின்னணி பற்றிய பரிசீலனை நடாத்தப்படும்

குறிப்பு: நெருங்கிய உறவினர்கள் சம்பந்தமாக எந்தவொரு குற்றவியல் பதிவுகளும் இருத்தல் ஆகாது. நெருங்கிய உறவினர்கள் என்பது விண்ணப்பதாரரின் தாய், தந்தை, பாதுகாவலர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் சகோதர சகோதரிகள் திருமணமானவர்களாயின் அவர்களின் துணைவியர்/கணவன்மார் ஆகியோரும் நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படுவர்.

8:2 விண்ணப்பதாரரின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக, அவராலும் அவரது நெருங்கிய உறவினர்களாலும் மற்றும் அவருடன் நெருங்கிப் பழகுபவர்களாலும் பேணப்படும் நன்னடத்தை, நடத்தைக்கோலம் ஆகியவை தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுவதுடன், திருப்தியற்ற பின்னணி அறிக்கைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள்

8:3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரர்கள் போலியான விபரங்களை வழங்கியுள்ளார் என்பது வெளிப்படுத்தப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்

8:4 திறமைச் சித்திப் பட்டியலின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ள விண்ணப்பதாரரின் பின்னணி அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர் மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்பட மாட்டார்.

09. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், பொலிஸ் வைத்தியசாலையின் வைத்திய பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மேலும், இதன்போது விண்ணப்பதாரர்கள் பொலிஸ் கடமைகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான உடற்தகுதி மற்றும் உள ஆரோக்கியம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். வைத்திய பணிப்பாளரினால் மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தின் பொது 169 படிவத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மருத்துவப் பரிசோதனைக்கு ஒரு தடவை மாத்திரமே தோற்ற முடியும்.

10. **பயிற்சியளிப்பு :**

10:1 திறந்த ஆட்சேர்ப்புக்காகப் பின்னணிப் பரிசோதனை மற்றும் மருத்துவப் பரிசோதனைகளில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மாத்திரமே பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதிக்கு பயிற்சிக்கு அழைக்கப்படுவர்.

10:2 இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் (ஆண் / பெண்) இலங்கை பொலிஸ் கல்லூரியில் / தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தில், பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதிக்காக ஆரம்பச் சேவைப் பயிற்சியும் பாடநெறி சார்ந்த செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

11:1 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மூன்று (03) வருட கால தகுதிகாண் பருவத்திற்கு உட்பட்டவர்களாவர். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது).

11:2 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் இனிவருங்காலங்களில் அது சம்பந்தமாக நிறை வேற்றப்படவுள்ள கட்டளைகள் ஏதுமிருப்பின் அவற்றிற்கும் அமைவாகக் கடமையாற்றல் வேண்டும்.

11:3 தாபனவிதிக் கோவையின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள், அரச சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், திணைக்களக் கட்டளைகள், சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல் கோவைகளின் விதிகளுக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

11:4 இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) நியமனம் பெற்ற திகதியிலிருந்து 03 வருட கால தகுதிகாண் சேவைக்காலம் முழுவதும் இலங்கை பொலிஸில் சேவையாற்ற வேண்டும் என்பதுடன், இந்த தகுதிகாண் சேவைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஏதேனும் ஓர் உத்தியோகத்தர் பதவியிலிருந்து இராஜினாமாச்

செய்ய உத்தேசிப்பின், அவரது பயிற்சி மற்றும் சீருடைகள் உள்ளிட்ட ஏனைய செலவினங்களுக்காக நிர்ணயிக்கப்படும் ஏதேனும் ஒரு தொகை இருப்பின், அவை அனைத்தையும் இராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பிக்கும் அதே சந்தர்ப்பத்தில் செலுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றில் அவர்கள் கையொப்பமிட வேண்டும். இராஜினாமா தொடர்பாக தாபனவிதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது).

11:5 நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தகைமை பெறுபவர்கள், நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்துக் கடன் பொறுப்புக்களிலிருந்தும் விடுபட்டிருத்தல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது).

11:6 நேரடியாகச் சேர்த்துக் கொள்ளப்படும் பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்), பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட உடனே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு இணங்க, பொலிஸ் மா அதிபரின் 1693/2003 மற்றும் 1804/2004 ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளுக்கு அமைய, பொலிஸ் நடத்தைவிதிக் கோவைக்கு இணங்கி நடப்பதாக சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

12. **நியமன நிபந்தனைகள் :**

நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

13. **வினைத்திறன்காண் தடைதாண்டல்:**

(மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது)

| *வினைத்திறன் காண் தடைதாண்டல் வகை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டிய கால எல்லை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துப் பரீட்சை / தொழிற்பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / ஏனையவை* |
|---|---|---|
| 01 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவை நிரந்தரமாக்கப்படும்) | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி, எழுத்துமூலம் மற்றும் செயன்முறை |
| 02 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 07 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |
| 03 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 12 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |
| 04 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 17 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |
| 05 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 21 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |
| 06 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜென்ட் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |
| 07 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜென்ட் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 07 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி |

**துப்பாக்கி திருத்துநர் (ஆண்) பதவிக்காக :**

| *வினைத்திறன் காண் தடைதாண்டல் வகை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டிய கால எல்லை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துப் பரீட்சை / தொழிற் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி / ஏனையவை* |
|---|---|---|
| 01 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவை நிரந்தரமாக்கப்படும்) | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி, எழுத்துமூலம் மற்றும் செயன்முறை |
| 02 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் கொஸ்தாபல் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 12 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி, எழுத்துமூலம் மற்றும் செயன்முறை |
| 03 வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜென்ட் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | வாய்மொழி, எழுத்துமூலம் மற்றும் செயன்முறை |

14. **மொழித் தேர்ச்சி:** (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது)

| மொழி | பெறப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரச கரும மொழி | அரசகரும மொழியல்லாத மொழி மூலமாகச் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள், குறிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினை அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழி | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய, உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

15. இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் I ஆம் பகுதியின் (II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுடன் தொடர்புடைய பொதுவான நிபந்தனைகள் இப்பதவிகளுக்கும் ஏற்புடையனவாகும்.

16. விண்ணபப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது விண்ணப்பதாரர்கள் வெள்ளை நிறப் பின்னணியில் பெறப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படமொன்றையும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளையும் விண்ணபத்தைப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்திலேயே பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

அ) பிறப்புச் சான்றிதழ்

ஆ) தேசிய ஆளடையாள அட்டை

இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

ஈ) செல்லுபடியாகும் சாரதி உரிமம்

உ) தொழிற்துறைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

ஊ) அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

எ) விண்ணப்பதாரர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனப் பிரகடனப்படுத்தி, நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதம். (தற்போது ஏற்கனவே தொழில் ஒன்றில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம் பொருந்தும்). (விண்ணபப் படிவத்தின் 17 ஆம் இலக்க மாதிரியின் கீழ் அமைந்திருத்தல் வேண்டும்)

ஏ) நீங்கள் அரசாங்க சேவையிலிருந்து அல்லது ஆயுதப் படைகளிலிருந்து விலகியிருப்பின், அதற்கான விலகல் கடிதம்.

17. தற்போது ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பப் படிவத்தின் உப இலக்கம் 12 இன் கீழ் உள்ள பின்வரும் மாதிரி வடிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட கடிதம் ஒன்றை நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. ............................................................................................ ...................................................... அவர்கள், ............................................................................................ ................................................ திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / இராணுவப் படையணியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என்பதையும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

.........................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: ................................

திகதி: ................................

உத்தியோகபூர்வ முத்திரை

குறிப்பு – பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணச் செலவுகளோ அல்லது ஏனைய செலவுகளோ இலங்கை பொலிஸ் துறையினால் வழங்கப்படமாட்டாது .

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மா அதிபர்.

07-182/1

---

## இலங்கை பொலிஸ்

### பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் (ஆண் / பெண்) பதவி
### (துணைச் சேவைகளின் கீழ் மற்றும் மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் துணைச் சேவை களின் கீழ் மற்றும் மாற்றுப் பணியமர்த்தல் அடிப் படையில் (அரசாங்கத்தில் கடமையாற்றும் உத்தியோகத் தர்களிடமிருந்து) பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் (ஆண்/ பெண்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

(அ) இணையத்தள தொகுப்பாளர் (ஆண்)
(ஆ) இணையத்தள வடிவமைப்பாளர் (ஆண்)
(இ) பொறித்தொகுதி பகுப்பாய்வாளர் (ஆண்)
(ஈ) கணினி மென்பொருள் தொகுப்பு ஆலோசகர் (ஆண்)
(உ) கணினியாளர் (ஆண்)
(ஊ) வரைவியல் (கிராபிக்ஸ்) வடிவமைப்பு ஆலோசகர் (ஆண்)
(எ) கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆலோசகர் (ஆண்)
(ஏ) நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் (ஆண்)
(ஐ) வலையமைப்பு கட்டமைப்பு கட்டுப்பாட்டாளர் (ஆண்)
(ஒ) தரவுத்தள கட்டமைப்பு கட்டுப்பாட்டாளர் (ஆண்)
(ஓ) மருந்தாளர் பதவி (ஆண் / பெண்)
(ஔ) உள்நாட்டு கைவினைஞர் (ஆண்)
(க) திருத்துநர் (ஆண்)
(கா) கணிய அளவையியலாளர் (ஆண்)
(கி) உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் (ஆண்)
(கீ) திட்ட வரைவாளர் (ஆண்)
(கு) சமையற்கலைஞர் (ஆண்)
(கூ) விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் (ஆண்)
(கெ) மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் (ஆண் / பெண்)
(கே) மருத்துவ ஆய்வுகூட நிபுணர் (ஆண் / பெண்)
(கை) தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்)

02. www.police.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவே சித்து, “join us” என்ற தெரிவை தெரிவு செய்வதன் மூலம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் (Scan) செய்வதன் மூலம் விண்ணப்பப் படிவத்திற்குள் பிரவேசித்து, இணையவழி (Online) முறையூடாக மாத்திரம் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து 2026.08.14 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், எந்தவொரு விண்ணப்பப்படிவமும் தபால் மூலம் அனுப்பப்படக் கூடாது. இணையவழி முறையூடாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை, ஆரம்பக் கட்டப் பரிசீலனைக்காக சமூகமளிக்கும் போது விண்ணப்பதாரர் எடுத்து வர வேண்டும். (இப்பிரதியில் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை இட்டிருத்தல் வேண்டும்.)

(அ) இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடற்ற தன்மைகள் காணப்படின், சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது எனக் கருதி உத்தேசிக்கப்பட வேண்டும்.

(ஆ) நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட மாட்டாது.

(இ) இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பான தீர்மானம் என்னால் மேற்கொள்ளப்படும்.

(ஈ) பதவியில் காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில் முன்னுரிமை வரிசைக்கு அமைய ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றதன் பின்னர், இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படும்.

(உ) விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறும் வரிசைக்கிரமத்திற்கு அமைய நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும்.

03. சம்பள விபரம் - (மாதாந்தம்) உப பொலிஸ் பரிசோதகர் பதவி (துணைச் சேவைகள்)

ரூபா 55,410.00 - 7x670 - 2x890 - 25x1,190 - ரூபா 91,630.00 (RS 03 - 2025)

இச்சம்பளக் கணிப்பீடானது அ.நி.சு. (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை) இலக்கம் 10/2025 இற்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சம்பள அளவீட்டுக்கு மேலதிகமாக, பின்வரும் கொடுப்பனவுகள் அவர்களுக்கு மாதாந்தம் உரித்தாகும்.

| | |
|---|---|
| (அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு: | ரூபா 17,800.00 |
| (ஆ) அடிப்படைச் சம்பளத்தில் 22% + ரூபா 1,250.00: | ரூபா 13,440.20 |
| (இ) உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு: | ரூபா 31,800.00 (பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2773/2024 இற்கு அமைய) |
| (ஈ) கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு: | ரூபா 2,000.00 |

04. **அடிப்படைத் தகைமைகள் :**

4.1 கல்வித் தகைமைகள் வரிசை இல. 01 இல் (அ) தொடக்கம் (ஒ) வரையான பதவிகளுக்காக:

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஊடக மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை நீங்கலாக)

**மருந்தாளர் பதவி (ஆண் / பெண்):**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆங்கில மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடம் உட்பட இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் ஏதேனும் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் மருந்தாக்கவியல் பட்டத்தைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை மருத்துவ சபையில் தற்போது முழு நேரப் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளராகக் கடமை யாற்றும், உள்வாரி அல்லது வெளிவாரி பாடநெறி மூலமான மருந்தாளராக இருத்தல் வேண்டும்.

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர்/ கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் / சமையற் கலைஞர் (ஆண்) பதவிகளுக்காக:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் பயிற்று மொழி மற்றும் கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் (ஆண்):**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஏதேனும் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை நீங்கலாக)

**மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் (ஆண் / பெண்):**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்கள் உட்பட 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மருத்துவ ஆய்வுகூட நிபுணர் (ஆண் / பெண்):**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் ஏதேனும் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்):**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (உயிரியல், விவசாய விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடத்துறைகளுள் ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

குறிப்பு 01: இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தின் பாட வகைப்பாட்டிற்கு அமைய, பாட இலக்கங்கள் 41 மற்றும் 44 ஐக் கொண்ட இரட்டை விஞ் ஞானப் பாடங்களை ஒரு பாட மாகவும், இலக்கங்கள் 42 மற்றும்

45 ஐக் கொண்ட இரட்டை கணிதப் பாடங்களை ஒரு பாடமாகவும் கருதப் பட்டு, பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக் கப்படும்.

குறிப்பு 02: க.பொ.த. (சா/தர) பரீட்சையில் தொழில் நுட்பப் பாடத்தின் எழுத்துப் பரீட்சை யில் சித்தியடையாமை, அப்பாடத் தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்த போதிலும் அப் பாடத் தில் சித்தியடையாததாகவே கருதப் படும்.

குறிப்பு 03: விருப்பத் தெரிவு அடிப்படையில் அமைந்த தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங் களம் ஆகிய பாடங்கள் க.பொ.த. (சா/ தர) பாடத்துறையில் உள்ளடக்கப் படாததால், அப்பாடங்களில் சித்தி யடைதலானது க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்த ஒரு பாட மாகக் கணிக்கப்பட மாட்டாது.

4:2 **தொழிற்துறைத் தகைமைகள் வரிசை இல. 01 இல் (அ) தொடக்கம் (ஒ) வரையான பதவிகளுக்காக:**

குறைந்தபட்சம் தேசிய தொழிற்துறைத் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்திலான டிப்ளோமா பாடநெறி அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான தகைமைகள் அல்லது பிற அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணினி அறிவு (கணினி எழுத்தறிவு) சம்பந்தமாகப் பின்வரும் பாடக் கூறுகளைக் கொண்ட பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் வேண்டும்.

I. கணினியைப் பயன்படுத்தித் தரப்படுத்தப் பட்ட கட்டமைப்பின் கீழ் கோப்புகளை முகாமை செய்தல்.

II. கணினி சொல் செயலாக்கம் (Word)

III. விரிதாள்களை (Excel) தயாரித்தலும் பயன் படுத்துதலும்.

IV. கணினியைப் பயன்படுத்திச் சமர்ப்பித்தல் (Power Point).

V. தரவுத்தளத்தை (Database) உருவாக்குதலும் பயன்படுத்துதலும்.

இணையம் மற்றும் மின்னஞ்சல் ஆகிய வற்றைப் பயன்படுத்துவதற்கான ஆற்றல்.

**மருந்தாளர் பதவி (ஆண் / பெண்) :**

இலங்கை மருத்துவ சபையினால் நடாத்தப்பட்ட வெளிவாரி மருந்தாளர் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் அல்லது மருத்துவ சபையின் உள்வாரி மருந்தாளர் பரீட்சையில் சித்தியடைந்து ஒரு வருட காலத் தொழிற்பயிற்சியைப் பெற்று, மருத்துவ சபையில் மருந்தாளராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் மருந்தாக்கவியல் பட்டத்தைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு: க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மருந் தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர் களுக்குத் தொழிற்துறைத் தகைமைகள் பொருந்தாது.

**கைத்தொழில் வடிவமைப்பாளர்/ திருத்துநர் / கணிய அளவையியலாளர் (ஆண்) பதவிகளுக்காக:**

NCT குடிப் பொறியியலாளர் 03 வருட பாடநெறி யொன்றை அல்லது அதற்கு இணையான பாடநெறி யொன்றை வெற்றிகரமாகப் பயின்றிருத்தல் வேண்டும் அல்லது வேலைத் துறைக்கு இணங்க தேசிய தொழிற்துறைத் தகைமை NVQ மட்டம் IV தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் (ஆண்):**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத உணவகச் சேவை மற்றும் 06 மாதங்களுக்குக் குறையாத உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் பாடநெறியை (NVQ மட்டம் V) வெற்றிகரமாகப் பயின்றிருத்தல் வேண்டும்.

**திட்ட வரைவாளர் (ஆண்):**

NCT குடிப் பொறியியலாளர் 03 வருட பாடநெறி யொன்றை அல்லது அதற்கு இணையான பாடநெறி யொன்றை வெற்றிகரமாகப் பயின்றிருத்தல் வேண்டும் அல்லது வேலைத் துறைக்கு இணங்க தேசிய தொழிற்துறைத் தகைமை (NVQ மட்டம் V) தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சமையற்கலைஞர் (ஆண்):**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன் றில் 06 மாதங்களுக்குக் குறையாத உணவகச் சேவை மற்றும் 06 மாதங்களுக்குக் குறையாத

சமையற்கலைஞர் பாடநெறியை (NVQ மட்டம் V) வெற்றிகரமாகப் பயின்றிருத்தல் வேண்டும்.

**விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் (ஆண்):**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் விளையாட்டு மைதானம் மற்றும் கிரிக்கெட் ஆடுகள பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட பாடநெறியொன்றை (NVQ மட்டம் IV) பயின்றிருத்தல் வேண்டும்.

**மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சின் 01 வருட கால மின் இதயவரைபு நிபுணர் பாடநெறியை அல்லது சுகாதார அமைச்சின் நவீனமயப்படுத்தப்பட்ட சுற்றுநிருபத்தின் படியான பயிற்சிப் கால எல்லைக்குள் பயிற்சிப் பாடநெறியைப் பயின்று டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மின் இதயவரைபு நிபுணர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் / விண்ணப்பதாரிகளுக்குத் தொழிற்துறைத் தகைமைகள் பொருந்தாது.

**மருத்துவ ஆய்வுகூட நிபுணர் (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சின் பயிற்சிப் பாடசாலையொன்றில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பத்திற்குரிய பயிற்சிப் பாடநெறியை 02 வருட காலம் பயின்று டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பட்டத்தைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மருத்துவ ஆய்வுகூட நிபுணர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தொழிற்துறைத் தகைமைகள் பொருந்தாது.

**தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்):**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாதியியல் பட்டத்தைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

சுகாதார அமைச்சின் பயிற்சிப் பாடசாலையொன்றில் தாதிப் பயிற்சிப் பாடநெறியை 03 வருட காலம் பயின்று டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, தாதிப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தொழிற்துறைத் தகைமைகள் பொருந்தாது.

4:3 **அனுபவம் :**

இலக்கம் 01 இன் (அ) முதல் (ஒ) வரையான பதவிகளுக்காக:

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA), இளைஞர் சேவைகள் மன்றம், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் போன்ற அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் துறைசார்ந்த (NVQ) 5 ஆம் மட்ட டிப்ளோமா தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தபட்சம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

தொழில்முறைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு, அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் துறைசார்ந்து குறைந்தபட்சம் 03 வருட கால தொழில்முறை அனுபவம் இருத்தல் வேண்டும்.

**மருந்தாளர் பதவி (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சு அல்லது சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மருந்தாளர் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முறை அனுபவக் காலம் பொருந்தாது.

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் (ஆண்) பதவிகளுக்காக:**

அரசாங்கத்தினால் அல்லது பொலிஸ் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறைசார்ந்து குறைந்தபட்சம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கணிய அளவையியலாளர் (ஆண்):**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இளைஞர் சேவைகள் மன்றம், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் போன்ற அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் தொடர்புடைய துறைசார்ந்த NVQ-V மட்ட டிப்ளோமா தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தபட்சம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

தொழில்முறைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு, அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் துறைசார்ந்து குறைந்தபட்சம் 03 வருட கால தொழில்முறை அனுபவம் இருத்தல் வேண்டும்.

**உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் (ஆண்):**

நட்சத்திரக் தர ஹோட்டல் ஒன்றில் உணவகப் பரிசோதகர் தரத்தில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**திட்ட வரைவாளர் (ஆண்):**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இளைஞர் சேவைகள் மன்றம், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் போன்ற அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் தொடர்புடைய துறைசார்ந்த NVQ Level-V மட்ட டிப்ளோமா தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்குக் குறைந்தபட்சம் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**சமையற்கலைஞர் (ஆண்):**

நட்சத்திரத் தர ஹோட்டல் ஒன்றில் சமையற் கலைஞப் பரிசோதகர் தரத்தில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் (ஆண்):**

விளையாட்டு மைதானங்கள் மற்றும் கிரிக்கெட் ஆடுகள பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மின் இதயவரைபு நிபுணர் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முறை அனுபவக் காலம் பொருந்தாது.

**மருத்துவ ஆய்வுகூட நிபுணர் (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மருத்துவஆய்வுகூடநிபுணர்பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முறை அனுபவக் காலம் பொருந்தாது.

**தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்):**

சுகாதார அமைச்சு அல்லது சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: க.பொ.த. (உயர் தர) மற்றும் க.பொ.த. (சாதாரண தர) கல்வித் தகைமைகளின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு,

பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முறை அனுபவக் காலம் பொருந்தாது.

4:4 **உடற்தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4:5 **ஏனையவை :**

4:5:1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

4:5:2 விண்ணப்பதாரர்கள் இலங்கை பொலிசாரினால் எதிர்பார்க்கப்படும் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4:5:3 திருமணமான/திருமணமாகாத எண் 01-இல் உள்ள (அ) முதல் (ஒ) மற்றும் (கு) (கூ) வரையிலான பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மருந்தாளர்:

திருமணமாகாத ஆண்/பெண் விண்ணப்பதாரர்களாக இருக்க வேண்டும். (விவாகரத்து பெற்ற மற்றும் விதவையான விண்ணப்பதாரர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.) இது ஏற்கனவே காவல்துறை அல்லது மருந்தாளர் சேவையில் பணி புரிபவர்களுக்குப் பொருந்தாது.

மின் வரைவாளர் :

திருமணமாகாத ஆண்/பெண் விண்ணப்பதாரர்களாக இருக்க வேண்டும். (விவாகரத்து பெற்ற மற்றும் விதவையான விண்ணப்பதாரர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.) இது ஏற்கனவே காவல்துறை அல்லது வரைவாளர் சேவையில் பணிபுரிபவர்களுக்குப் பொருந்தாது.

**தொழில்துறை இல்லப் பராமரிப்பாளர்/இயந்திரப் பணியாளர்/அளவு ஆய்வாளர்/உணவக மேலாளர்/வடிவமைப்பாளர்** ஆகிய பதவிகளுக்குத் திருமணமாகாத ஆண் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம். (விவாகரத்து பெற்ற மற்றும் விதவையான நபர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.)

**மருத்துவ ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர்** பதவிக்கு, திருமணமாகாத ஆண்/பெண் விண்ணப்பதாரர்கள் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் மற்றும் விதவைகள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி இல்லை.) ஏற்கனவே காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு இது பொருந்தாது.

**செவிலியர் அதிகாரி** பதவிக்கு, திருமணமாகாத ஆண்/பெண் விண்ணப்பதாரர்கள் தகுதியுடையவர்கள். (விவாகரத்து பெற்றவர்கள் மற்றும் விதவைகள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி இல்லை.) ஏற்கனவே காவல் துறை அல்லது செவிலியர் துறையில் பணிபுரிபவர்களுக்கு இது பொருந்தாது

4:5:4 தீவின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றுவதற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

4:5:5 • ஆண்கள் :

உயரம் - 05 அடி 06 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். - மார்பு - மூச்சை உள்ளிழுக்காத நிலையில் 32 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

• பெண்கள் :

உயரம் - 05 அடி 04 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(விசேட தகைமைகள் மற்றும் திறமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் சம்பந்தமாக, பொலிஸ் மா அதிபரின் விருப்பத்தின் பேரில் இந்த உயர எல்லைகள் மற்றும் மார்பு அளவுகள் விலக்களிக்கப்படலாம்.)

4:5:6 **கண் பார்வை சம்பந்தமான தேவைகள்:**

ஒரு கண்ணின் பார்வைத் திறன் 6/12 க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வைத் திறன் 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வைத் திறன் 6/18 ஆகவும் காணப்படினும் அது ஏற்றுக்கொள்ளப்படும். நிறப் பார்வை (வண்ணப் பார்வை) இயல்பானதாக இருத்தல் வேண்டும்.

4:5:7 செயற்கையான உடல் மாற்றங்களைச் செய்திருத்தல் கூடாது. (உதாரணம்: பச்சைக் குத்தியிருத்தல்)

4:5:8 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குத் தேவையான 4.1 முதல் 4.6 வரையான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4:6 **வயது :**

வரிசை இல. 01 இல் (அ) தொடக்கம் (ஏ) வரையான பதவிகளுக்காக: வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 - 32 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

மருந்தாளர் பதவி / கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / மின் இதயவரைபு நிபுணர் / மருத்துவ ஆய்வுகூட நிபுணர் / திட்ட வரைவாளர் / சமையற்கலைஞர்/ தாதி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு மாத்திரம்: வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 - 30 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் பதவிக்காக:**

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 - 40 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**வரையறைக்குட்பட்ட மற்றும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது:**

தற்போது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் அதிகபட்ச வயது எல்லை 35 வருடங்களாகும்.

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் ஆகிய பதவிகளுக்காக:**

தற்போது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு, வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அதிகபட்ச வயது எல்லை 18 - 30 வருடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறைமை :**

5:1 ஆரம்பப் பரிசோதனை (ஆரம்பக் கட்ட நேர்முகத்தேர்வு): விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ஆரம்பப் பரிசீலனைக்காக அழைக்கப்படுவர். அந்தப் பரிசீலனையின் போது மேலே 4.1 முதல் 4.6 வரையான தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

5:2 **உடற்தகைமைப் பரிசோதனை:**

பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையொன்றின் மூலம் விண்ணப்பதாரர்கள் உடற்தகைமைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

5:3 இப்பரிசோதனையின் மூலம் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கட்டமைந்த நேர்முகப்பரீட்சைக்கு (Structured Interview) உட்படுத்தப்படுவர்.

06. கட்டமைந்த நேர்முகப்பரீட்சை வரிசை இல. 01 இல் (அ) தொடக்கம் (ஒ) வரையான பதவிகளுக்காக:

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 | 40% |
| 02. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 20 | |
| 03. விளையாட்டுத் திறமைகள் | 25 | |
| 04. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 15 | |
| 05. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

**மருந்தாளர் பதவி / மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் (ஆண் / பெண்) பதவிகளுக்காக**

- தொழில்முறைத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் / உப பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. தொழிலுக்குரிய சேவை அனுபவம் (வருடமொன்றிற்கு 06 வீதம் அதிகபட்சம்) | 30 | 40% |
| 02. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 25 | |
| 03. விளையாட்டுத் திறமைகள் | 10 | |
| 04. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 25 | |
| 05. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

- தொழில்முறைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 30 | 40% |
| 02. விளையாட்டுத் திறமைகள் | 30 | |
| 03. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 30 | |
| 04. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் / விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் / சமையற்கலைஞர் பதவிகளுக்காக (ஆண்) :**

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 | 40% |
| 02. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 20 | |
| 03. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 04. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 20 | |
| 05. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. **தொழில்முறைத் தகைமைகள்** (இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலுக்குரிய பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது சுகாதார அமைச்சினால்அங்கீகரிக்கப்பட்டமருத்துவஆய்வுகூட தொழில்நுட்பவியலுக்குரிய டிப்ளோமாவைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல்) | 40 | பொருத்தமற்றது |
| 02. **சேவை அனுபவம்** சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனமொன்றில் சேவை அனுபவம் (வருடமொன்றிற்கு 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 20 புள்ளிகள்) | 20 | |
| 03. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 10 | |
| 04. விளையாட்டுத் திறமைகள் | 10 | |
| 05. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 10 | |
| 06. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

**மருத்துவ ஆய்வுகூட நிபுணர் (ஆண் / பெண்) :**

- தொழில்முறைத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் / உப பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக
- தொழில்முறைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மொழிஅறிவு / கணினித் திறன் / ஏனையவை | 30 | பொருத்தமற்றது |
| 02. விளையாட்டுத் திறமைகள் | 30 | |
| 03. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 30 | |
| 04. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

**தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்) :**

- தொழில்முறைத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் / உப பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. **தொழில்முறைத் தகைமைகள் :** (இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாதியியல் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தாதிமார் கல்லூரியொன்றில் தாதியியல் டிப்ளோமாவைப் பெற்று, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல்) | 40 | 40% |
| 02. **சேவை அனுபவம்** : சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனமொன்றில் சேவை அனுபவம் (வருடமொன்றிற்கு 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 20 புள்ளிகள்) | 20 | |
| 03. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 10 | |
| 04. விளையாட்டுத் திறமைகள் | 10 | |
| 05. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 10 | |
| 06. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

- தொழில்முறைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்குக் கருதப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 01. மொழி அறிவு / கணினித் திறன் / ஏனையவை | 30 | 40% |
| 02. விளையாட்டுத் திறமைகள் | 30 | |
| 03. தலைமைத்துவம் / சமூக சேவைகள் | 30 | |
| 04. நேர்முகப்பரீட்சை குழுவின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | |

குறிப்பு: ஆரம்பப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், அதில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

06. **எழுத்துப் பரீட்சை:**

இணையதளத் தொகுப்பாளர் / இணையதள மேம்பாடு / கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / கணினி மென்பொருள் தொகுப்பு ஆலோசகர் / கணினி / வரைகலை வடிவமைப்பு ஆலோசகர் / கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆலோசகர் / நிரலாளர் / வலையமைப்புக் கணினி அமைப்பு நிர்வாகி / தரவுக் கணினி அமைப்பு நிர்வாகி / விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கப் பராமரிப்பு ஆலோசகர்

| *விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் திறன் | 100 | 40% |
| 02. பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சையும் | 100 | 40% |
| 03. தொழிற்றுறைக்கான -<br>• எழுத்துமூல பரீட்சை<br>• செயன்முறை பரீட்சை | 40<br>60 } 100 | ஒவ்வொரு பகுதியிலிருந்தும் 40% வீதம் |

**மருந்தாளர் பதவி / மின்னிதயவரைபு (ECG) தொழில்நுட்பவியலாளர் / மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்/ தாதி உத்தியோகத்தர் (பெண் / ஆண்) பதவிகளுக்காக**

| *விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் திறன் | 100 | 40% |
| 02. பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சையும் | 100 | 40% |
| 03. சுகாதாரத் துறை சார்ந்த பொது அறிவு | 100 | 40% |

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் / சமையற்கலைஞர் (ஆண்) பதவிகளுக்காக:**

| *விடயங்கள்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித் திறன் | 100 | 40% |
| 02. பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சையும் | 100 | 40% |
| 03. துறை சார்ந்த பொது அறிவு | 100 | 40% |

7.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெறப்படும் புள்ளிகள், எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளுடன் கூட்டப்பட்டு, விண்ணப்பதாரர் (ஆண் / பெண்) பெறும் மொத்தப் புள்ளிகள் தீர்மானிக்கப்படும்.

7.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் வரிசைப்படியிலான திறமைச் சித்திப் பட்டியலுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

08. **விண்ணப்பதாரரின் பின்னணி பற்றிய பரிசீலனை :**

8.1 மேலே 7.2 ஆம் பந்தியின்படி ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் (ஆண் / பெண்) நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரரின் பின்னணி பற்றிய பரிசீலனை நடாத்தப்படும்.

குறிப்பு: நெருங்கிய உறவினர்கள் சம்பந்தமாக எந்தவொரு குற்றவியல் பதிவுகளும் இருத்தல் ஆகாது. விண்ணப்பதாரர் (ஆண் / பெண்) திருமணமானவராயின் அவரது துணைவர்/துணைவி மற்றும் விண்ணப்பதாரர்களின் தாய், தந்தை, பாதுகாவலர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் சகோதர சகோதரிகள் திருமணமானவர்களாயின் அவர்களின் துணைவர்/துணைவி ஆகியோரே நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படுவர்.

8.2 விண்ணப்பதாரரின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக, அவராலும் அவரது நெருங்கிய உறவினர்களாலும் மற்றும் அவருடன் நெருங்கிப் பழகுபவர்களாலும் பேணப்படும் நன்னடத்தை, நடத்தைக்கோலம் ஆகியவை தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுவதுடன், திருப்தியற்ற பின்னணி அறிக்கைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள்.

8.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரர்கள் போலியான / பொய்யான விபரங்களை வழங்குவது அவர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு ஒரு தகைமையீனமாகும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அவர் போலியான விபரங்களை வழங்கியுள்ளார் என்பது வெளிப்படுத்தப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

8.4 திறமைச் சித்திப் பட்டியலின் படி ஆட்சேர்ப்புக்கு எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரரின் (ஆண் / பெண்) பின்னணி அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர் மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்பட மாட்டார்.

09. **மருத்துவப் பரிசோதனை :**

மருத்துவப் பரிசோதனைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்), பொலிஸ் வைத்தியசாலையின் மருத்துவப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன், இதன்போது விண்ணப்பதாரர்கள் பொலிஸ் கடமைகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான உடற்தகுதி மற்றும் உளத்தகுதிப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். மருத்துவப் பணிப்பாளர் மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்தின் 169 ஆம் இலக்கப் பொதுப் படிவத்தின் கீழ் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவப் பரிசோதனைக்கு ஒருமுறை மாத்திரமே தோற்ற முடியும். (மருத்துவப் பரிசோதனையில் சித்தியடையத் தவறும் விண்ணப்பதாரர்கள் அது தொடர்பாக மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியாது.)

மருந்தாளர் பதவி / மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் / மருத்துவ ஆய்வுகூட நிபுணர் / தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்) பதவிகளுக்கான விண்ணப்பதாரர்கள் பொலிஸ் வைத்தியசாலையின் கடமைகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான உடற்தகுதி மற்றும் உளத்தகுதிப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர்.

10. **பயிற்சியளிப்பு :**

வலைத்தளத் தொகுப்பாளர் / வலைத்தள உருவாக்கம் / கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / கணினி மென்பொருள் தொகுப்பு ஆலோசகர் / கணினி / வரைகலை வடிவமைப்பு ஆலோசகர் / கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆலோசகர் / நிரலாளர் / வலையமைப்பு அமைப்பு நிர்வாகி / தரவு அமைப்பு நிர்வாகி

I. திறந்த ஆட்சேர்ப்பின் கீழ், பின்னணிப் பரிசீலனை மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மாத்திரம் பொலிஸ் மா அதிபரினால் குறிக்கப்படும் திகதியொன்றில் ஆரம்ப பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

II. வரையறுக்கப்பட்ட அடிப்படை மற்றும் திறமையின் மீது ஆட்சேர்ப்பு செய்யப்பட தகைமை பெறும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் மா அதிபரினால் குறிக்கப்படும் திகதியொன்றில் பதவிக்கான விளக்கங்கள் வழங்கும் பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

**மருந்தாளர் பதவி / மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் / மருத்துவ ஆய்வுகூட நிபுணர் / தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்) / விளையாட்டு மைதானம் மற்றும் ஆடுகள பராமரிப்பு ஆலோசகர் பதவிகளுக்காக:**

I. திறந்த ஆட்சேர்ப்பின் போது, பின்னணிப் பரிசீலனை மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) மாத்திரம் பொலிஸ் மா அதிபரினால் குறிக்கப்படும் திகதியொன்றில் 12 வார கால ஆரம்ப பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

II. வரையறுக்கப்பட்ட அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது, தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரினால் குறிக்கப்படும் திகதியொன்றில் 12 வார கால பதவிக்கான விளக்கங்கள் வழங்கும் பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் (ஆண்) பதவிகளுக்காக:**

I. திறந்த ஆட்சேர்ப்பின் கீழ், பின்னணிப் பரிசீலனை மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதிக்கான பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

II. ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இலங்கை பொலிஸ் கல்லூரியில் / தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவகத்தில் பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் காலப்பகுதியொன்றுக்காக சேவை ஆரம்பப் பயிற்சியும் பாடம் சார்ந்த செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்படும்.

**சமையற்கலைஞர் (ஆண்) பதவிக்காக:**

I. திறந்த ஆட்சேர்ப்பின் போது, பின்னணிப் பரிசீலனை மற்றும் மருத்துவப் பரிசோதனை ஆகியவற்றில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பொலிஸ் மா அதிபரினால் குறிக்கப்படும் திகதியொன்றில் 12 வார கால ஆரம்ப பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவர்.

II. வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் வரை, உரிய பதவியில் அவர்களை நிரந்தரப்படுத்துவது நிறுத்தி வைக்கப்படும். அத்துடன், காலப்போக்கில் மீண்டும் அவர்கள் முன்னதாக வகித்த பதவிக்கே திருப்பி அனுப்பப்படுவர்.

11. **சேவை நிபந்தனைகள் :**

இணையதளத் தொகுப்பாளர் / இணையதள மேம்பாடு / கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / கணினி மென்பொருள் தொகுப்பு ஆலோசகர் / கணினி / வரைகலை வடிவமைப்பு ஆலோசகர் / கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆலோசகர் / நிரலாளர் / வலையமைப்புக் கணினி அமைப்பு நிர்வாகி / தரவுக் கணினி அமைப்பு நிர்வாகி / விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கப் பராமரிப்பு ஆலோசகர்

11.1 திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணையும் தகுதிகாண் உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் / பயிற்சிக் காலத்திற்கு உட்படுவர். பயிற்சிக் காலத்தினுள் திருமணம் செய்வதாயின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் [தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.2 வரையறுக்கப்பட்ட அடிப்படையில் மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட (01) கடமைப் பதவிக் காலத்திற்கு உட்படுவர்.

11.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப் படுத்துவதற்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் இனிவரும் காலங்களில் அது தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ள கட்டளைகள் ஏதுமிருப்பின் அவற்றுக்கும் இணங்க கடமையாற்ற வேண்டும்.

11.4 தாபனவிதிக் கோவை விதிகள், நிதிப் பிரமாணங்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள், அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், பொது நிருவாகச் சுற்றறிக்கைகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், இலங்கை பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல்கோவைகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடமை புரிதல் வேண்டும்.

11.5 பயிற்சி பெறும் சேவைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஓர் உத்தியோகத்தர் (ஆண் / பெண்) பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய உத்தேசிப்பாரானால், அவரது பயிற்சி மற்றும் சீருடை உள்ளடங்கலாக ஏனைய செலவினங்களுக்காகக் குறிக்கப்படும் கட்டணம் ஏதுமிருப்பின், அவை அனைத்தையும் இராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்திலேயே செலுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றில் அவர்கள் கையொப்பமிட வேண்டும். இராஜினாமா செய்தல் தொடர்பாக தாபனவிதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (அலுவலக அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.6 திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணையும் உத்தியோகத்தர்கள் நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்துக் கடன்கள் மற்றும் கடன் பொறுப்புக்களிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.7 தகுதிகாண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் (துணைச் சேவைகள்) பயிற்சியை ஆரம்பித்த உடனே, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு இணங்க, 1693/2003 மற்றும் 1804/2004 ஆம் இலக்கப் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகளின்படி பொலிஸ் நடத்தைவிதிக் கோவைக்கு அமைவாகச் செயற்படுவதாக சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

**மருந்தாளர் பதவி / மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் / மருத்துவ ஆய்வுகூட நிபுணர் / தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்)/ சமையற்கலைஞர் (ஆண்) பதவிகளுக்காக:**

11.1 சான்றிதழ் பெற்ற அல்லது பெறாத, திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணையும் தகுதிகாண் உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் / பயிற்சிப் பருவக் காலத்திற்கும், வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தொழிற் பாடநெறியின் பின்னர் ஒரு வருட (01) கடமைப் பதவிக் காலத்திற்கும் உட்படுவர். பயிற்சிக் காலத்தினுள் திருமணம் செய்வதாயின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.2 க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணையும் மற்றும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள், தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் வரை உரிய பதவியில் அவர்களை நிரந்தரப்படுத்துவது நிறுத்தி வைக்கப்படும். வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யத் தவறின், காலப்போக்கில் மீண்டும் அவர்கள் முன்னதாக வகித்த பதவிக்கே திருப்பி அனுப்பப்படுவர்.

11.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் (ஆண் / பெண்) அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் இனிவரும் காலங்களில் அது தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ள கட்டளைகள் ஏதுமிருப்பின் அவற்றுக்கும் இணங்கக் கடமையாற்ற வேண்டும்.

11.4 தாபனவிதிக் கோவை விதிகள், நிதிப் பிரமாணங்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள், அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், பொது நிருவாகச் சுற்றறிக்கைகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், இலங்கை பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல்கோவைகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

11.5 க.பொ.த. (உயர் தர) தகைமைகளின் அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மருந்தாளர் பயிற்சியை நிறைவு செய்ததன் பின்னர், மருந்தாளர் சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் பதிவு கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து 15 வருட கட்டாய சேவைக்காலம் இலங்கை பொலிஸில் சேவையாற்ற வேண்டும்.

11.6 கட்டாய சேவைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஓர் உத்தியோகத்தர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய உத்தேசிப்பாரானால், அவரது பயிற்சி மற்றும் சீருடை உள்ளடங்கலாக ஏனைய செலவினங்களுக்காகக் குறிக்கப்படும் கட்டணம் ஏதுமிருப்பின், அவை அனைத்தையும் இராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்திலேயே செலுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றில் அவர்கள் கையொப்பமிட வேண்டும். இராஜினாமாச் செய்தல் தொடர்பாக தாபனவிதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.7 திறந்த ஆட்சேர்ப்பின் கீழ் இணையும் உத்தியோகத்தர்கள் நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்துக் கடன்கள் மற்றும் கடன் பொறுப்புக்களிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.8 தகுதிகாண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் (துணைச் சேவைகள்) / தகுதிகாண் பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் (துணைச் சேவைகள்) பயிற்சியை ஆரம்பித்த உடனே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு இணங்க, 1693/2003 மற்றும் 1804/2004 ஆம் இலக்கப் பொலிஸ் அதிபரின் சுற்றறிக்கைகளின்படி பொலிஸ் நடத்தைவிதிக் கோவைக்கு அமைவாகச் செயற்படுவதாக சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

**கைத்தொழில் வடிவமைப்பாளர் / திருத்துநர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் (ஆண்) பதவிகளுக்காக:**

11.1 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் / பயிற்சிப் பருவக் காலத்திற்கு உட்படுவர். பயிற்சிப் பருவக் காலத்தினுள் திருமணம் செய்வதாயின் பொலிஸ் மா அதிபரின் அனுமதியின் பேரில்

மாத்திரமே அதனை மேற்கொள்ளல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.2 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் இனிவரும் காலங்களில் அது தொடர்பாக நிறைவேற்றப்படவுள்ள கட்டளைகள் ஏதுமிருப்பின் அவற்றுக்கும் இணங்கக் கடமையாற்ற வேண்டும்.

11.3 தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள், தாபனவிதிக் கோவை விதிகள், நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், பொது நிருவாகச் சுற்றறிக்கைகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், இலங்கை பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல் கோவைகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

11.4 ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 வருட தகுதிகாண் / பயிற்சிப் பருவச் சேவைக்காலம் இலங்கை பொலிஸில் சேவையாற்ற வேண்டும் என்பதுடன், இந்தத் தகுதிகாண் சேவைக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஓர் உத்தியோகத்தர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய உத்தேசிப்பாரானால், அவரது பயிற்சி மற்றும் சீருடை உள்ளடங்கலாக ஏனைய செலவினங்களுக்காகக் குறிக்கப்படும் கட்டணம் ஏதுமிருப்பின், அவை அனைத்தையும் இராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் சந்தர்ப்பத்திலேயே செலுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்கும் ஒப்பந்தமொன்றில் அவர்கள் கையொப்பமிட வேண்டும். இராஜினாமா செய்தல் தொடர்பாக தாபனவிதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுகூட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.5 நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தகைமை பெறுபவர்கள், நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்துக் கடன்கள் மற்றும் கடன் பொறுப்புக்களிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது).

11.6 திறந்த முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் (துணைச் சேவைகள்) பயிற்சியை ஆரம்பித்த உடனே, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு இணங்க, 1693/2003 மற்றும் 1804/2004 ஆம் இலக்கப் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகளின்படி பொலிஸ் நடத்தைவிதிக் கோவைக்கு அமைவாகச் செயற்படுவதாக சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

12. **பதவியின் தன்மை :**

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்துடையது. (அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் மாற்றமடையக்கூடும்.)

13. வினைத்திறன் காண் தடைதாண்டல்:

| *வினைத்திறன் காண் தடைதாண்டல் வகை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டிய கால எல்லை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துப் பரீட்சை / தொழிற்பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / ஏனையவை* |
|---|---|---|
| முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரப்படுத்துதல்) | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| இரண்டாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 08 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| மூன்றாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |

இணையத்தளத் தொகுப்பாளர் / இணையத்தள மேம்பாடு / கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / கணினி மென்பொருள் தொகுப்பு ஆலோசகர் / கணினி / வரைகலை வடிவமைப்பு ஆலோசகர் / கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு ஆலோசகர் / நிரலாளர் / வலையமைப்பு அமைப்பு நிர்வாகி / விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கப் பராமரிப்பு ஆலோசகர்

(மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது)

**மருந்தாளர் / மின் இதயவரைபு (ஈ.சி.ஜி) நிபுணர் / மருத்துவ ஆய்வுகூட நிபுணர் / தாதி உத்தியோகத்தர் (ஆண் / பெண்)/ கைத்தொழில் வடிவமைப்பாளர் / கணிய அளவையியலாளர் / உணவுச்சாலை கட்டுப்பாட்டாளர் / திட்ட வரைவாளர் / சமையற்கலைஞர் (ஆண்)**

| *வினைத்திறன் காண் தடைதாண்டல் வகை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டிய கால எல்லை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை: எழுத்துப் பரீட்சை / தொழிற்பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / ஏனையவை* |
|---|---|---|
| முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரப்படுத்துதல்) | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| இரண்டாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 07 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| மூன்றாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |

**பதவிகளுக்காக:**

**திருத்துநர் பதவி (ஆண்)**

| *வினைத்திறன் காண் தடைதாண்டல் வகை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியடைய வேண்டிய கால எல்லை* | *வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை: எழுத்துப் பரீட்சை / தொழிற்பரீட்சை / சான்றிதழ் பாடநெறி / ஏனையவை* |
|---|---|---|
| முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரப்படுத்துதல்) | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| இரண்டாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | உதவிப் பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 07 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |
| மூன்றாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் (துணைச் சேவைகள்) பதவிக்கு நியமிக்கப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து, செயன்முறை மற்றும் வாய்மொழி |

14. **மொழித் தேர்ச்சி** : (மாற்றுப் பணியமர்த்தல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது விதியாகாது)

| மொழி | ලබා ගත යුතු ප්‍රවීණතාව |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழியல்லாத பிறிதொரு மொழி மூலமாகச் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள், பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனை அடுத்து வந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய, தமக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| ஏனைய அரசகரும மொழி | பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனை அடுத்து வந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய, உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| இணைப்பு மொழி | பொருத்தமற்றது |

15. இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் 1 ஆம் பகுதியின் (11 அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுடன் தொடர்புடைய பொதுவான நிபந்தனைகள் இப்பதவிகளுக்கும் ஏற்புடையனவாகும்.

16. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது விண்ணப்பதாரர்கள் வெள்ளை நிறப் பின்னணியில் பெறப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான வர்ணப் புகைப்படமொன்றையும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளையும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்திலேயே பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) தேசிய ஆளடையாள அட்டை;
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;
(ஈ) செல்லுபடியாகும் சாரதி உரிமம்;
(உ) தொழிற்துறைத் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;
(ஊ) அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்;
(எ) விண்ணப்பதாரர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனத் தெரிவித்து, நிறுவனத்தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டகடிதம்.(தற்போது ஏற்கனவே தொழிலொன்றில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம் பொருந்தும்). (இது விண்ணப்பப் படிவத்தின் 17 ஆம் இலக்க மாதிரியின் கீழ் அமைந்திருத்தல் வேண்டும்);
(ஏ) நீங்கள் அரசாங்க சேவையிலிருந்து அல்லது ஆயுதப்படையிலிருந்து விலகியிருப்பின், அதற்கான விலகல் கடிதம்.

17. தற்போது ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது, விண்ணப்பப் படிவத்தின் உப இலக்கம் 12 இன் கீழ் உள்ள பின்வரும் மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட கடிதமொன்றை நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

> இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. ............................................................................................ ……….. அவர்கள், ........................................................................................... திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / இராணுவப் படையணியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என்பதையும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
>
> .........................................
> நிறுவனத் தலைவரின் கையொப்பம்
> பெயர்: ................................
> திகதி: ................................
> உத்தியோகபூர்வ முத்திரை

குறிப்பு – பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்வித பயணச் செலவுகளோ அல்லது ஏனைய செலவுகளோ இலங்கை பொலிஸ் துறையினால் வழங்கப்படமாட்டாது .

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மாஅதிபர்.

07-182/2

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் (பொது) பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூன் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா தெற்கு | சின்ன செட்டிக்குளம் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா தெற்கு பிரிவின் (பொது) விவாக பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், வவுனியா |

07-103

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### விவசாய மீளாய்வுச் சபை ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களை (குழு) நியமித்தல்

2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்திச் சட்டத்தின் 42 அ (1) ஆம் பிரிவின் படி மீளாய்வு சபை தாபிப்பதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவானது, நீதித் துறையில் மற்றும் விவசாயத் துறையில் பரந்த அறிவுள்ளவர்களிலிருந்து ஒன்பதிற்கு (09) மேற்படாத உறுப்பினர்களை உள்ளடக்கிய சபை (குழு) ஒன்றை மூன்று வருட காலப்பகுதிக்கு நியமிக்கவுள்ளது.

அதற்கமைவாக நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடைய 70 வயதுக்கு மேற்படாத பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

01. ஓய்வு பெற்ற நீதிபதிகள்
02. பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள சட்டத்தரணிகள்
03. விவசாய சேவை சட்டத்துடன் தொடர்புடையதாக விவசாயத் துறையிலே நிறைவேற்றுத் தரத்தில் பத்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்கள்.

சகல விண்ணப்பப்படிவங்களும் 2026, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2023 ஆம் ஆண்டில் குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு செலுத்தபபட்ட கொடுப்பனவுகள்,

மாதாந்த கொடுப்பனவு - ரூ. 50,000.00
பிரயாண கொடுப்பனவு - ரூ. 10.000.00 மாதாந்தம் வழங்கப்படும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு - 12,
2026, யூலை 02.

07-132

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## 1877/28 ஆம் இலக்க 2014.08.28 ஆந் திகதிய இலங்கை கட்டட நிர்மாண சேவைப்பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் கீழ் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் முதன்மை கட்டிடக்கலைஞர் பதவியின் வெற்றிடத்தினை நிரப்புதல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் உருவாக்கப்பட்ட இலங்கை கட்டட நிர்மாணசேவையின் தரம் I இன் முதன்மை கட்டிடக்கலைஞர் பதவிக்கு நியமிப்பதற்காக 1877/28 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1994/68 மற்றும் 2016, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் திருத்தம் செய்யப்பட்ட 2006.01.01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும் மற்றும் இலங்கை கட்டட நிர்மாணசேவை பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2085/46 ஆம் இலக்க மற்றும் 2018.08.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தம் செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை கட்டட நிர்மாண சேவையில் தற்போது தரம் I இற்கு பதவி உயர்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெற்றிடங்களின் எண்ணிக்கை:**

| *தொடர் இலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01 | சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | முதன்மை கட்டிடக்கலைஞர் (இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I) | பதவி 01 |

02. **பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள்** :

இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல்

03. **பதவிக்கு தெரிவுசெய்யப்படுகின்ற முறை** :

பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால், அவ் ஆணைக்குழுவினூடாக அங்கீகரிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கள் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் சேவை மூப்பு மற்றும் திறமைக்கு பெற்றுக்கொள்ளும் இணைந்த புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குவரிசையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் உரிய பதவிக்கு நியமனம் செய்யப்படுவதோடு நியமனம் அமுலுக்கு வரும் திகதி பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

04. **புள்ளி வழங்கும் நடைமுறை :**

| *இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமனம்செய்தல் – அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கள் விதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|
| **01. சேவை அனுபவம் :**<br>இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் செயற்றிறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்துக்காக புள்ளி வழங்கப்படும்.<br>1.1 **பொதுச்சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை** :<br>01/2019 இன் படி ஒவ்வொரு திணைக்களத்திலும் உயர் சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு அதிக பட்ச புள்ளிகளையும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அதற்கேற்ற விகிதாசாரத்தின் அடிப் படையிலும் புள்ளிகள் வழங்கப்படும். | 65 | 65 |
| **02. திறமை**<br>02.1 மேலதிக கல்வித் தகைமைகள்<br>02.1.1 பட்டப்பின் படிப்பு | 05 | 30 |

| *இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமனம்செய்தல் – அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கள் விதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|
| 02.2 கட்டடக் கலைஞராக கட்டடக்கலைக் கற்கை மற்றும் தொழிலை எழுச்சி பெறச்செய்ய வழங்கப்பட்ட பங்களிப்பு<br><br>02.2.1 துறைசார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வெளியீடுகள்<br>• ஆய்வுசார் வெளியீடுகள் (Published papers in journals or conferences)<br>- ஒரு வெளியீட்டுக்கு 03 புள்ளிகள் வீதம் (அதிகபட்ச வெளியீடுகள் 02ஆகும் )<br>• பத்திரிகைகள்/ இதழ்கள்<br>- ஒரு வெளியீட்டுக்கு 02 புள்ளிகள் வீதம் (அதிகபட்ச வெளியீடுகள் 03ஆகும்<br><br>02.1.2 கட்டடக் கலைக்குரிய உள்நாட்டு வெளிநாட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவமொன்றில் வகித்த பதவிக்கு வகிக்கப் பட்ட ஒரு பதவிக்கு 02 புள்ளிகள் வீதம் (எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதிக பட்ச பதவிகள் 03 க்கு புள்ளிகள் வழங்கப்படும்<br><br>02.1.3 பாராட்டுக்களுக்காக நிறுவனத் தலைவரினால் பொது 230b படிவத்தினூடாக வழங்கப்பட்டுள்ள பாராட்டுக் கடித மொன்றுக்கு 01 புள்ளி வீதம் ( அதிகபட்ச பாராட்டுக் கடிதங்கள் 03 க்காக ) | 06<br><br>06<br><br>03 | |
| 02.3 தெரிவு செய்யப்படும் பதவியின் கருமங்களுக்காக பங்களிப்பு செய்யும் விதம் தொடர்பில் கணினி மூலம் செய்யப்படும் 10 நிமிட முன்வைப்பு (Power Point Presentation)<br>i. தொடர்பு (Relevancy) - 02 புள்ளிகள்<br>ii. ஆக்கத்திறன் / (Creativity ) - 02 புள்ளிகள்<br>iii. அதற்காக அறிமுகப்படுத்தும் புத்தாக்க மற்றும் பரிந்துரைகள் (Innovations & Suggestions) - 02 புள்ளிகள்<br>iv. நேர முகாமைத்துவம் (Time Management) - 02 புள்ளிகள்<br>v. ஆங்கில மொழிப் புலமை (Proficiency in English) - 02 புள்ளிகள்<br><br>குறிப்பு -<br>அ) மேற்படி (V) அளவுகோளின் கீழ் புள்ளிகளை பெற முடிவது விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் இவ் சமர்ப்பித்தலை செய்யும் போது மாத்திரம் ஆகும்.<br>ஆ) முன்வைப்பதற்குரிய வன் பிரதியை (Hard copy) நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிகமாக ஆங்கில மொழிமூலம் சமர்ப்பிக்கும் முன்வைத்தலில் வன்பிரதியையும் இவ் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். | 10 | |
| 03. நேர்காணலில் வெளிக்காட்டும் திறமை<br>a) தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br>b) ஆளுமை - 01 புள்ளிகள் | | 05 |
| மொத்த புள்ளிகள் | | 100 |

**கவனிக்க –**

I. 2.1.1 மற்றும் 2.2.1 இன் கீழ் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து வெளியீடுகளுக்கும் எழுத்து மூல உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

05. பொதுச் சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கு இலங்கை கட்டிட நிர்மாண சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1877/28 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ) அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் கீழ் தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் வெற்றிடங்கள் நிலவும் மேற்படி பதவிக்கு உரிய பதவியின் கடமையை பொறுப்பேற்கும் நாளிலிருந்து செயற்படும்படி உரிய பதவிக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

06. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்யும் தற்போது செயற்திறனோடு சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

07. கீழ்வரும் மாதிரிக்கேற்ப பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் 2026.08.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் 'செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு -07' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் 'இலங்கை கட்டட நிர்மாணசேவையின் தரம் I இன் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல்' என்றவாறு தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும் . அத்தினத்துக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு விண்ணப்பப்படிவம் தொலைதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பிலான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருப்பதாகக் கண்டால் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்களமொழி மூல அறிவித்தல் செல்லுபடியாகும்.

09. விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களது சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இலங்கை கட்டட நிர்மாணசேவையின் தரம் I இன் முதன்மை கட்டிடக்கலைஞர் பதவியின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பப்படிவம்**

01. உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் :

i. முழுப்பெயர் ( சிங்களத்தில்) : ....................................................................................................

ii. முழுப்பெயர் ( ஆங்கில பெரிய எழுத்தில்): ..........................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

iii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ...........................................................

( உதா: GUNAWARDHANA, H. M. S. K.)

iv. ஆண்/பெண் : பெண் ☐ ஆண் ☐

v. பிறந்த திகதி : ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

vi. தேசிய ஆளடையாளஅட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

vii. நிரந்தர முகவரி:
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

viii. நிரந்தர முகவரி (ஆங்கிலபெரிய எழுத்துக்களில்):
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

ix. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் ...................... மாதங்கள் ................ நாட்கள் ..................

x. தொலைபேசி இலக்கம் :

கைத்தொலைபேசி : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

அலுவலகம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

மின்னஞ்சல் முகவரி ………………………………………………….

02. பதவி தொடர்பான தகவல்கள்

i. இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதி : ……………………
ii. இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதியில் திகதி வரையிலான சேவைக்காலம் :

வருடம்: [ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

iii. நிகழ்கால சேவை நிலையம் மற்றும் முகவரி
iv. தற்போது வகிக்கும் பதவி:-
v. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-
vi. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:-

| *தொடர் இல.* | *கல்வித் தகைமைகள்* | *தகைமைகளை பூரணப் படுத்திய ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

vii. துறைசார் தகைமைகள்:
குறித்த துறைதொடர்பில் வெளிக்காட்டியுள்ள விஷேட பங்களிப்புக்கள் :

| ❖ ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் | விபரங்கள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

❖ ஆய்வுச் சுருக்கம் நேர்காணலின்போது முன்வைக்கப்பட வேண்டும்.

03. (i) இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஊதியமற்ற விடுமுறை அல்லது பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை பெற்றுள்ளீரா?

| *தொடர் இல.* | *காரணம்* | *ஊதியமற்ற / பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை* | *காலம்* | |
|---|---|---|---|---|
| | | | *திகதியில் இருந்து* | *திகதி வரை* |
| | | | | |
| | | | | |

(ii) விண்ணப்பம் கோரப்பட்ட கடைசித் திகதிக்கு முந்தைய 05 ஆண்டுகளில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

04. (i) கடந்த 5 ஆண்டுகளில் நீங்கள் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்பட்டுள்ளீரா? ..........................................................

(ii) முடிவுறாத ஒழுக்காற்று விவகாரங்கள் நிலுவையில் இருக்கின்றனவா? ..................................................................................

05. விண்ணப்பதாரரின் பிரகடனம்

மேற்கூறிய தகவல்கள் என் அறிவுக்குட்பட்ட வகையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன்மூலம் சான்று பகர்கிறேன்.

திகதி :……………………… ………………………………………….
உத்தியோகத்தரின் கையொப்பம்

06. திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றுப்படுத்தல்

பொருத்தமற்ற பகுதிகளை வெட்டி விடவும்.

I. இந்த விண்ணப்பதாரர் தொடர்பில் எந்தவொரு ஒழுங்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டு அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டோ இல்லை என்பது (எடுக்கப்பட்டிருப்பின் குற்றம் புரிந்த திகதி : தண்டனை முதலிய ஒழுங்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களைத் தரவும்.)

II. இந்த விண்ணப்பதாரர் தரம் - I க்கு பதவி உயர்வு பெற்ற பின்னர் ஊதியம் அற்ற அல்லது பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை பெற்றுள்ளார்/பெறவில்லை. (பெற்றிருந்தால் கீழ்வரும் அட்டவணையில் காலப்பகுதியைக் குறிக்கவும்)

| *காலப்பகுதி* | | *பகுதி ஊதியம்/ ஊதியம் அற்ற விடுமுறை* | *காரணம்* |
|---|---|---|---|
| *முதல்* | *வரை* | | |
| | | | |

III. பதவியுயர்வுத் திகதிக்கு முந்தைய ஐந்து வருடங்களுக்குள் (05) அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்று திருப்திகரமான சேவைக்காலத்தை பூரணப்படுத்தியுள்ளார் /பூரணப்படுத்தவில்லை

IV. அதன்படி அவன்/அவள் இந்நேர்காணலில் கலந்துகொள்ளத் தேவையான அடிப்படைத் தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் / பூரணப்படுத்தவில்லை என்பதால் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்க வில்லை.

திகதி .................................................... ........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ முத்திரை

07-141

## அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் வெற்றிடங்கள்

அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|
| பணிப்பாளர் பதவி | |
| பணிப்பாளர் - நிதி (HM 1-1) | 01 |
| பணிப்பாளர் - போதைப் பொருள் தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சி - (HM 1-1) | 01 |
| பணிப்பாளர் ஆராய்ச்சி | 01 |

1. **பணிப்பாளர் பதவி :**

1.1 **பணிப்பாளர் பெயர் - பணிப்பாளர் நிதி**

**சேவைப் பிரிவு - சிரேஷ்ட முகாமைத்துவம் - (HM 1-1)**

**வெற்றிட எண்ணிக்கை - 01**

அ. **தகைமைகள்**

அ. **1 வெளி விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 01 அல்லது 02)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, நிதி / கணக்கியல் / வர்த்தகவியல் ஆகிய பாடத்துறைகளில் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளல் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளல் அல்லது பட்டய சான்றிதழ் கொண்ட கணக்காளர் நிறுவகத்தின் (ACCA) அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல்.

உடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு உரிய துறைக்கு பொருத்தமான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட ஆரம்ப பட்ட தகைமையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனம் / நிலையிற் சபை நிறுவனம்/ சபை / திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1 – 1) பதவியில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடங்கள் (பதின்மூன்று) அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

02. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்.

மற்றும்

அரசாங்கத்தின், அரச கூட்டுத்தாபனத்தில் / நிலையியற் சபை நிறுவனம் / சபை / திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1-1) பதவியில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடகால சேவைக் கால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அ. **2 உள்ளக விண்ணப்பதாரர்கள் :**

மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் மத்திய முகாமைத்துவ சேவைப் பிரிவில் (MM 1-1) 1 ஆம் தரத்தின் குறைந்தபட்சம் 3 வருடங்கள் (மூன்று) உரிய விடயத்துறையின் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல்.

உடன்

உரிய துறையில் பட்டப்பின் பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்க வேண்டும்.

ஆ. **வயது**

வயது : 35 வயதினை விடக் குறையாத மற்றும் 55 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்ளுக்காக உயர்ந்தபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

இ. சம்பள குறியீட்டு இலக்கம் - HM 1-1

ஈ. மாதாந்த சம்பள அளவு -

HM 1-1 அ.சு. 01/2025 (ரூபா 140,640.00 – 15 x 4,100 - ரூபா 202,140.00) (சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

குறிப்பு : இதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாகன உரிமை கிடைப்பதுடன் அரச வர்த்தக சுற்றரிக்கை 1/2015 (i) மற்றும் (ii) இற்கு அமைய எரிபொருள் கொடுப்பனவு மற்றும் இதற்கு

மேலதிகமாக தொடர்பு சாதனக் கொடுப்பனவு PED 2/2022 சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் தொழில்சார் கொடுப்பனவு.

1.2 **பதவிப் பெயர் - பணிப்பாளர் (போதைப் பொருள் தடுப்பு, கல்வி மற்றும் பயற்சி)**

**சேவைப் பிரிவு - சிரேஷ்ட முகாமைத்துவம் - (HM1-1)**

**வெற்றிட எண்ணிக்கை - 01**

அ. **தகைமை**

அ. **1 வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூகவியல் விஞ்ஞானம் ஆகிய துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

உடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு உரிய துறைக்கு பொருத்தமான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட ஆரம்ப பட்ட தகைமையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் / நிலையிற் சபை நிறுவனம் / சபை / திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1 – 1) பதவியில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடங்கள் (பதின்மூன்று) அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அ. **2 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பாதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

2. அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையில் நடுத்தர முகாமைத்துவ சேவைப் பிரிவில் (MM 1 – 1) 1 ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருடங்கள் உரிய துறையில் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல்.

உடன்

உரிய துறையில் பட்டப்பின் பட்டத்தினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ஆ. வயது

வயது : 35 வயதினை விடக் குறையாத மற்றும் 55 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்ளுக்காக உயாந்தபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

இ. **சம்பளக் குறியீட்டு இலக்கம்** - HM 1-1

ஈ. **மாதாந்த சம்பள அளவு** -

HM 1-1 அ.சு. 01/2025 (ரூபா 140,640.00 - 15 x 4,100 - ரூபா 202,140.00) (சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

குறிப்பு : இதற்கு மேலதிகமாக உத்தியோக பூர்வ வாகன உரிமை கிடைப்பதுடன் அரசாங்க வர்த்தக சுற்றரிக்கை 1/2015 (i) மற்றும் (ii) இற்கு அமைய எரிபொருள் கொடுப்பனவு மற்றும் இதற்கு மேலதிகமாக தொடர்புசாதனக் கொடுப்பனவு PED 2/2022 சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் தொழில்சார் கொடுப்பனவு அ.சு. 5/2027 இற்கமைய வழங்கப்படும்.

1.3 **பதவிப் பெயர் - பணிப்பாளர் - ஆராய்ச்சி**

**சேவைப் பிரிவு – சிரேஷ்ட முகாமைத்துவம் - HM 1-1**

**வெற்றிட எண்ணிக்கை - 01**

அ. தகைமை

அ. 1 வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூக விஞ்ஞானம் / குற்றவியல் விஞ்ஞானம்/ சமூகப் பணிகள் / புள்ளிவிபரவியல்/ இரசாயண விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

உடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு உரிய துறைக்கு பொருத்தமான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட ஆரம்ப கட்ட தகைமையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம்/ நிலையிற் சபை நிறுவனம் / சபை/ திணைக்களம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (MM 1 – 1) பதவியில் குறைந்தபட்சம் உரிய துறையில் 13 வருடங்கள் (பதின்மூன்று) அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அ. 2 உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)

3. மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

1. அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையில் நடுத்தர முகாமைத்துவ சேவைப் பிரிவில் (MM 1 – 1) 1 ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 03 (மூன்று) வருடங்கள் உரிய துறையில் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல்.

உடன்

உரிய துறையில் பட்டப்பின் பட்டத்தினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ஆ. **வயது** :

வயது : 35 வயதினை விடக் குறையாத மற்றும் 55 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்ளுக்காக உயர்ந்தபட்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

இ. **சம்பளக் குறியீட்டு இலக்கம்** : HM 1-1

ஈ. **மாதாந்த சம்பள அளவு** :

HM 1-1 அ.சு. 01/2025 (ரூபா 140,640.00 - 15 x 4,100 - ரூபா 202,140.00) (சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

குறிப்பு : இதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாகன உரிமை கிடைப்பதுடன் அரச வர்த்தக சுற்றறிக்கை 1/2015 (i) மற்றும் (ii) இற்கு அமைய எரிபொருள் கொடுப்பனவு மற்றும் இதற்கு மேலதிகமாக தொடர்பு சாதனக் கொடுப்பனவு PED 2/2022 சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் தொழில் சார் கொடுப்பனவு அ. சு. 5/2027 இற் கமைய வழங்கப்படும்.

**இப் பதவிற்குரிய பொதுவான நிபந்தனைகள்** :

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன், பதவிக்குரியதாக பொறுப்பளிக்கப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமான உடல் உள தகைமை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

**விண்ணப்படிவத்தினை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினமன்று அனைத்து முறைகளிலும் தகைமைகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**

**விண்ணப்படிவத்தினை சமர்பிக்கும் மொழி :**

சுகல விண்ணப்பதாரர்களும் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் தமது விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.nddcb.gov.lk இற்கு பிரவேசித்து, “தொழில்” (https://www.nddcb.gov.lk/sinhala/careers.php) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்து Submit Application மேற்கொண்டதன் பின்னர் அதன் பிரதியினை பதவிறக்கம் செய்து, அவ் வன்பொருள் பிரதியினை நிதி செலுத்திய பற்றுச்சீட்டின் முதல் பிரதியினை இணைத்து தங்ளது விண்ணப்படிவத்துடன் பதவிக்குரிய சான்றிதழ் பத்திரங்களின் போட்டோ பிரதியுடன் பதிவுத் தபால் ஊடாக அனுப்ப வேண்டும்.

**ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகள் :**

ஆட்சேர்ப்பு பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்டநேர்முகப்பரீட்சையின்பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**ஆட்சேர்ப்பின் தன்மை :**

நிரந்தரமான, ஊழிய சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்காக உரிமை கொண்டதாகும்.

**விண்ணப்பக் கட்டணம் :**

வெளி விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்ப கட்டண மாக ரூபா 500.00 நிதியினை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை “அபாயகர அவுடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபை” என்ற பெயரில் இலங்கை வங்கியின் கோபரேட் கிளையில் (Corporate Branch) இலக்கம் 00001643 இன் கீழ் பேணப்பட்டுள்ள கணக்கில் வைப்பிலிட்டு, நிதி வைப்பு பத்திரத்தின் போட்டோ பிரதியினை வைத்துக் கொண்டு, அதன் முதல் பிரதி (Deposit slip) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்ப கட்டணம் மீளளிப்பு செய்யபட்ட மாட்டாது.

பதிவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவத்தினை (கடித உரையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட்டு) உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் 2026.07.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் “தலைவர். ஆபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை, இலக்கம் 383, கோட்டே வீதி, ராஜகிரிய” என்ற முகவரியிற்கு கிடைக்கச் செய்யுமாறு அனுப்பவும். அரசாங்க திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது நிலையியற் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்படிவத்தினை நிறுவன / திணைக்கள பொறுப்பாளர் ஊடாக அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதுள்ள விண்ணப்படிவங்கள் / முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்படிவங்கள் / நிதி வைப்புப் பத்திரத்தின் முதல் பிரதியினை இணைத்து அனுப்பாத விண்ணப்பப் படிவங்கள் / பதிவிறக்கம் (Download) செய்யப்பட்ட விண்ணப்படிவங்களைத் தவிர அனுப்பப்பட்ட ஏனைய விண்ணப்படிவங்கள் மற்றும் விண்ணப்பபப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியிற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்
அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை,
383, கோட்டே வீதி,
ராஜகிரிய.

வெளியீட்டுத் திகதி : 2026.07.10

07-159

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பாதுகாப்பு அமைச்சு

## உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர், தரம் III நிர்வாக சேவை வகை பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

1. பாதுகாப்பு அமைச்சின் நிறைவேற்று சேவைப் பிரிவிலுள்ள உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் தரம் III பதவிகளுக்கான 08 ஆட்சேர்ப்புகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மட்டுமே நடாத்தப்படும் என இதன் மூலம் அறிவிக்கப் படுகின்றது.

    (அ) விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் https://www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” இன் கீழ் “Online Applications - Recruitment Exams / E.B. Exams” பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இணையவழி (Online) முறையில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இணையவழி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026, யூலை 13 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகி, 2026, ஓகத்து 07 ஆம் திகதி இரவு 09.00 மணிக்கு நிறைவடையும்.

    (ஆ) தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் அதிகாரிகள், விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தங்களது தனிப்பட்ட கோப்பு பதிவில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் போது, நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பிரதியும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

    (இ) விண்ணப்பங்களை அனுப்புவதை இறுதி திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் ஏதேனும் பாதகமான நிலைமைகளுக்குப் பொறுப்பு விண்ணப்பதாரருக்கே உரியது.

2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துத் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில், அறிவு மற்றும் திறன்களின் அடிப்படையில் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பத்தாரிகள் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

3. (அ) நியமனம் அமலுக்கு வரும் திகதி பொது சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும். நியமன அதிகாரிக்கு எந்தவொரு அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருக்க அதிகாரம் இருக்கும்.

    (ஆ) அரசாங்க சேவையின் நியமனங்களை ஒழுங்கு படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், 2012.03.23 அன்று அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/EST/5/1/1/1/201 மற்றும் 2025.02.10 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்நடைமுறையில் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், நிறுவனக் கோவையும் நிதி ஒழுங்குவிதிகளும், இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடைமுறை விதிகளும், 1956, பெப்புருவரி 17 ஆந் திகதியிட்ட இலக்கம் 21 உடைய வெடிபொருள் கட்டளைச் சட்டத்தின் விதிவிதானங்களும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இன் விதிகளும், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 20/2001 இன் விதிகளும், நிறுவனக் கோவையும் நிதி ஒழுங்குவிதிகளும் ஆகியவற்றிற்கு உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

    (இ) இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதல் செயல் திறன் தடை பரிட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.

    (ஈ) ஒரு நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், 2020.10.16 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்க. 18/2020 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளின் விதிகளின்படி, நீங்கள் நியமனத் திற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மொழிக்கு ஏற்ப, அரசகரும மொழிப் புலமையை பூர்த்தி செய்ய வேண்டும்.

4. 2025.03.25 ஆந் திகதியிட்ட இலக்கம் 10/2025 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி, இப்பதவிக்கு SL 1 - 2025 சம்பளக் குறியீடு உரியதாகும். அதற்கான சம்பள அளவுகோல்,

    ரூ. 82,150 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ.195,970 ஆகும். இச்சம்பளம் உங்களுக்கு 2027.01.01 ஆந் திகதி முதல் உரியதாகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து, இச்சுற்றறிக்கையின் இணைப்பு III இன் விதிகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரிமையுடையது மாகும். இப்பரீட்சையின் மூலம் நிறைவேற்று சேவைப்

பிரிவின் உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் அதிகாரிகளுக்கு உரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அதிகாரி உட்பட வேண்டும்.

6. **தகைமைகள்** : உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளர், தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகுதிகள் பொருந்தும்.

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று வயது 21 ஆண்டுகளுக்கு குறையாமலும் 35 ஆண்டுகளுக்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும். (அதன்படி, 2005.08.07 அன்று அல்லது அதற்கு முன்னரும், 1991.08.07 அன்று அல்லது அதற்கு பின்னரும் பிறந்தவர்களுக்கு மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க தகுதி உண்டு.)

குறிப்பு : உள்நாட்டு விண்ணப்பதாரர்கள் மற்றும் தற்போது அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

(இ) சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

(ஈ) ஏதேனும் ஒரு சமயப் பிரிவில் துறவற நிலையை வகிக்கும் எவரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவராவார்.

(உ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

(ஊ) கீழ்க்காணும் கல்வித் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்:-

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் இரசாயனவியல் துறையில் சிறப்புப் பட்டப் படிப்பை வகுப்பு சித்தியுடன் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில், இரசாயனவியலுடன் கூடிய விஞ்ஞானப் பட்டப்படிப்பை முதல் வகுப்பு சித்தியோ அல்லது இரண்டாம் வகுப்பு மேல்தர சித்தியோ உடன் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில், இரசாயனவியலுடன் கூடிய விஞ்ஞானப் பட்டப்படிப்புடன் இரசாயன வியல் தொடர்பான முதுநிலை டிப்ளோ மாவைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

iv. இரசாயனவியல் நிறுவனத்தின் பட்டய உறுப் பினராக இருக்க வேண்டும்.

v. **உள்நாட்டு விண்ணப்பதாரர்களுக்கு** :-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இரசாயனவியலுடன் கூடிய விஞ்ஞானப் பட்டப்படிப்பைப் பெற்றதுடன், வெடிபொருள் கட்டுப்பாட்டாளரின் மேற்பார்வையின் கீழ் வெடிபொருள் துறையுடன் தொடர்புடைய பணிகளில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட பாதுகாப்பு அமைச்சில் பணி யாற்றும் அதிகாரியாக இருக்க வேண்டும்.

குறிப்பு: (ஊ) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை, 2012, மாச்சு 23 ஆந் திகதியன்று வெடிபொருள் கட்டுப் பாட்டாளரின் மேற்பார்வையின் கீழ் வெடிபொருள் துறையுடன் தொடர் புடைய பணிகளில் பாதுகாப்பு அமைச்சில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாக பணியாற்றி வந்த அதிகாரிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் 2026, ஓகத்து 07 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்

7. **பரீட்சை நடைமுறை :**

7.1 **பரீட்சை முறை :**

(அ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

ஒரு விண்ணப்பதார் தனக்குப் பொருத்தமான ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்து, அந்த மொழியில் பரீட்சைக்குக்கு திட்டமிடப்பட்ட அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட வினாத்தாள் பின்னர் மாற்றப்படாது. இந்தப் பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| *தொ. இல.* | *வினா பத்திரம்* | *காலம்* | *மொத்த புள்ளி* | *பெறவேண்டிய புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | கிரகித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | நுண்ணறிவு பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | செய்முறை இரசாயனவியல் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

i. **கிரகித்தல்** :
இந்த வினாத்தாள் கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல் மற்றும் மொழிப் பயன்பாடு தொடர்பான விண்ணப்பதாரரின் புரிதலை மதிப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட சில பாடங்களைக் கொண்டதாகும். இப்பாடங்களை அடிப்படையாகக் கொண்டு, அடிக்கோடிடப்பட்ட சொற்களின் பொருளை ஒரு தனி வாக்கியத்தில் விளக்குதல், அல்லது அதனைப் பற்றிய விமர்சனக் குறிப்புகளை எழுதுதல், அல்லது வழங்கப்பட்ட தெரிவுகளில் மிகவும் பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுத்தல், அல்லது கொடுக்கப்பட்ட வினாவிற்க்கான பல பதில்களில் இருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பணிகள் விண்ணப்பதாரர்களிடம் கேட்கப்படும்.

ii. **நுண்ணறிவுத் தேர்வு :**
விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான பகுத்தறிவு மற்றும் பகுப்பாய்வுத் திறன்கள் மற்றும் வாய்மொழி, எண் மற்றும் உருவக சூழலில் வழங்கப்படும் சிக்கல்கள் குறித்து துல்லியமான அனுமானங்களைச் செய்யும் திறனை அளவிட வடிவமைக்கப்பட்ட ஒரு புறநிலை வகை வினாத்தாள்.

iii. **செய்முறை இரசாயனவியல் :**
இந்த வினாத்தாள் இலங்கையின் புவியியல் அமைவிடம், கனிம வளங்களின் பரவல், பொருளாதார முன்னேற்றத்திற்கான இரசாயனவியல் அடித்தளம், வெடிபொருட்களின் அமைப்பு மற்றும் பயன்பாடு, 1956 பெப்ரவரி 17 ஆம் திகதியிட்ட இலக்கம் 21 உடைய வெடிபொருள் கட்டளைச் சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து 1969 ஆம் ஆண்டின் இலக்கம் 33, 1976 ஆம் ஆண்டின் இலக்கம் 36, 1978 ஆம் ஆண்டின் இலக்கம் 14 மற்றும் 2005 ஆம் ஆண்டின் இலக்கம் 18 ஆகிய சட்டங்களின் மூலம் செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் வகையில் தயாரிக்கப்படுகிறது. இவ்வினாத்தாள் பல்தேர்வு, குறும் எழுத்து மற்றும் பகுதி கட்டமைப்புடைய கேள்விகளை உள்ளடக்கியதாகும்.

(ஆ) இப்போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனம் பெறத் தகுதி அடைவதற்கு, ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் நாற்பது சதவீதம் (40%) மதிப்பெண்களை விண்ணப்பதாரர்கள் பெற்றிருக்க வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்பும் வகையில், விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் தரவரிசை ஒழுங்கு கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

குறிப்பு:- இந்த வினாத்தாள்கள், அலுவலகப் பணிகளுக்கான விண்ணப்பதாரர்களின் தகுதிகள் மற்றும் திறனை சோதிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

7.2 **பரீட்சை முடிவுகள் வெளியிடுதல் :**

(அ) நியமன அதிகாரியால் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஏற்ற திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேறு அறிக்கை, பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்படுவதற்கோ அல்லது (http://www.results.exams.gov.lk) இணையத்தளத்தின் ஊடாக பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கோ, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரர்கள் உட்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

7.3 பரீட்சைக்காக இணையவழி (Online) மூலம் விண்ணப்பிப்பது தொடர்பான வழிமுறைகள்

(அ) இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியாக அனுப்பிய மின்னணு பிரதியை திணைக்களம் செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொண்டதா / ஏற்றுக் கொள்ளவில்லையா என்பது, முறைமையில் உள்நுழைய பயன்படுத்தப்பட்ட கைப்பேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூல மாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கான விண்ணப்பத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள வழிமுறைத் தாளை (Instruction) பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை நிரப்பும் போது அவ்வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி யைப் பெற்ற பின்னர் அதில் செய்யப்படும் எந்த மாற்றமும் செல்லுபடியாகக் கருதப் படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாகவும் துல்லியமாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சைக்கு தொடர்புடைய ஒழுங்குவிதிகளின்படி ஏதேனும் விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோன்றத் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது அதற்கு பின்னரோ எந்த நிலையிலும் அவரது / அவளது விண்ணப்பம் இரத்து செய்யப்படலாம்.

(இ) விண்ணப்பதாரர் வழங்கிய தகவல்கள் பின்னர் தவறானவை எனத் தெரியவந்தாலோ அல்லது அவர் / அவள் நோக்கமுடனாக ஏதேனும் தகவலை மறைத்திருப்பது வெளிப்பட்டாலோ, அவருக்கு / அவளுக்கு மேலதிகமாக நியமனம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது. மேலும், இப்பரீட்சையின் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனமும் இரத்து செய்யப் படலாம் அல்லது அரசுப் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுத்தப்படலாம்.

7.4 **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது, இணைய முறை மையின் மூலம் வழங்கப்படும் கீழ்க்காணும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே பணம் செலுத்தப்பட வேண்டும்.

i. ஏதேனும் வங்கியின் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

ii. இணைய பரிவர்த்தனை வசதி கொண்ட ஏதேனும் வங்கியின் பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறையின் மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கியின் ஏதேனும் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :-

(அ) மேற்கண்ட முறைகள் மூலம் பணம் செலுத்தும் விதம் தொடர்பான வழிமுறைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்கான தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டதற்கான அறிவிப்பு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத் திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். குறைவாகவோ அதிகமாகவோ கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகளுக்காக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்த காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப் படமாட்டாது அல்லது வேறு எந்தப் பரீட் சைக்கும் மாற்றப்படமாட்டாது.

7.5 **பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்குதல் :**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றவர்களே விண்ணப்பித் துள்ளனர் என்ற முன்னறிவிப்பின் அடிப் படையில், விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு, பரீட் சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் இணையவழி மூலம் மட்டுமே வழங்கப்படும். பரீட்சை அனுமதி

அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அதனை இணைய அறிவிப்பின் மூலமாகவும் / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவும் அறிவிக்கும்.

(ஆ) தமக்கான அனுமதி அட்டை கிடைக்காத விண்ணப்பதாரர் இருப்பின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுகுறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு பிரிவில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைத் துல்லியமாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை இணைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், பரீட்சைகள் திணைக்களம் கோரும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நகலை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(இ) அனுமதி அட்டையை பரிசோதித்து, திருத் தங்கள் ஏதேனும் இருப்பின் காலதாமத மின்றி பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்புகொண்டு, விண்ணப்பத்தின் அடிப் படையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்ட பத்தில் அல்லது நேர்முகத் தேர்வின் போது செய்யப்படும் திருத்தக் கோரிக்கைகள் பரிசீலிக் கப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் கையொப்பம், நிறுவனத் தலைவராலோ அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியாலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்ப தாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர் / ஓய்வு பெற்ற அதிகாரி / பிரிவின் கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பொதுநொத்தாரீஸ்/ முப்படைகளின் ஆணை யளிக்கப்பட்ட அதிகாரி / அரசாங்க அல்லது மாகாண அரசாங்கப் பணியின் நிரந்தர பணியாளர் தர அதிகாரி / புத்த விஹாரத்தின் விஹாராதிபதி அல்லது நாயக்க தேரர் / அல்லது வேறு மத வழிபாட்டுத் தலத்தின் பொறுப்பாளர் அல்லது மதகுரு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.6 **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) பரீட்சைக்கு தோன்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை, முதன்முறையாக பரீட்சைக்கு தோன்றும் நாளில் அந்த மண்டபத்தின் பரீட்சை மைய பொறுப்பாளர்/ மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரருக்கு பரீட் சைக்கு தோன்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோன்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

குறிப்பு :- விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் அல்லது அவள் பரீட்சைக்கு தோன்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது.

(இ) பரீட்சை விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் தாங்கள் தோன்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) பரீட்சை விண்ணப்பதாரர்கள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகமும் காதுகளும் தெளிவாகத் தெரிவதற்காக, மின்னணு தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட

மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத் திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகத்தையும் காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

8. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழி உரையே செல்லுபடியாகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக பிரச்சினை எழுந்தால் அதுகுறித்தும், பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும். அந்தத் தீர்மானமே இறுதியானதாகும்.

பொது சேவை ஆணையக்குழுவின் உத்தரவின்படி,

ஏயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொண்டா
(ஓய்வுபெற்ற)
டபிள்யூடபிள்யூவி ஆர்டபிள்யூபி ஆர்எஸ்பி
(இரண்டு பார்கள்),
ஆர்எஸ்பி மற்றும் பார், யுஎஸ்பி,
எஃப்என்டீயூ (சீனா), பி.எஸ்.சி
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு தலைமையக கட்டிடம்,
ஸ்ரீ ஜெயவர்த்தன புற, கோட்டை,
2026.07.

07-185

---

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளைச் சேர்ந்த உத்தி யோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், தரமுயர்த் தல்கள் மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உள்ளிட்ட அனைத்து தாபன ரீதியான விவகாரங்களும், 2014.10.23 ஆம் திகதியிடப்பட்ட 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.07.08 ஆம் திகதியிடப்பட்ட 2444/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.06.19 ஆம் திகதியிடப்பட்ட 2493/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் ஆகியவற்றின் விதிகளுக்கு இணங்க, I ஆம் வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் 2026, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என்றும்; இக்குறிப்பிட்ட பரீட்சைக்கு பிரிவெனாக்களில் கடமையாற்றும் பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரமே நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பித்த நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப் பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரர்கள் தங்களது இரண்டாவது விருப்பத் தெரிவாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றுக்கு வழிப்படுத்தப்படுவார்கள். மேலும், முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட் சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doents.lk என்ற இணையத் தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications – Recruitment Exams / E.B. Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறைமையூடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, யூலை மாதம் 31 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப் பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு பிரதிகளினதும் உரிய பகுதிகளைக்

கையெழுத்தினால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் உறுதிப்படுத்தி, வலயக் கல்விப் பணிப்பாளரின் சான்றுப்படுத்துகையுடன் அதில் ஒரு பிரதியைத் தனது தனிப்பட்ட கோவையில் சேர்க்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவைப்படும் போது சமர்ப்பிப்பதற்காகத் தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலைக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

2.0

I. இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும்.

II. பரீட்சார்த்தி தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த விதிகளினை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

III. இப்பரீட்சைக்கு பிரிவெனாக்களில் கடமையாற்றும் பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

IV. இப்பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் தோற்றும் பட்சத்தில், அது குறித்து விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பான மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை யானது முதற்தடவையாக நடாத்தப்படுவதனால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பப்படிவங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல்:**

நிகழ்நிலை (Online) மூலமான பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, முறை மைக்குள் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை ஊடாக விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள்ளே தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப பிரதானி திருப்தியடையக்கூடிய வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அதேபோன்று, பரீட்சார்த்திகள் தங்களது அடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் எவற்றையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த தருணத்திலிருந்து பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண் ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண் ணப்பதாரர்களுக்கு மாத்திரம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலமாக மாத்திரமே வெளியிடப்படும்.

பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப பிரதானியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடனே, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது குறித்த விபரம் இணையதள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அறியத்தரப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன ரீதியான பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை, இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைத் தன்வசம் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களை மேற்கொள்வதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வெளியிடப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது அதற்குரிய வினைத் திறன் காண் தடைதாண்டலுக்குரிய தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒரு அங்கீகாரமாகக் கருதப்படலாகாது.

8.0 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது, வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றளிக்கப்படல் வேண்டும்.

9.0 பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப் பட்ட அனுமதி அட்டைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில், திணைக்களத் தலைவர்களினால் தேவை யானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். இதற்கான பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாது.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் மாத்திரமே நடாத்தப்படும். அவற்றில் தங்களது நியமனப் பாடத்திற்குரிய மொழிமூலத்தில் அல்லது ஏதேனும் ஒரு அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றுகின்ற ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழிமூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12.0 பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீ கரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீ கரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீ கரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களில் தரம் 3 வகுப்பு II, தரம் 3 வகுப்பு I மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமானி பட்டத் தகைமையின் அடிப்படையில் தரம் 2-II இற்கு ஆட்சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள், உரிய தரத்திற்கு நியமிக்கப்பட்டு மூன்று (3) ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 **வினாக்களின் கட்டமைப்பு**

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள, கீழே 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள் (மொடியூல்) தொடர்பான பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப் பரீட்சை நடாத்தப்படும். இவ்வினைத் திறன்காண் தடைத்தாண்டலுக்குரிய எழுத்துப் பரீட்சையானது, தொடர்புடைய அனைத்து இதவடிவங்களையும் (மொடியூல்) உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு தயாரிக்கப்படும்.

| *கட்ட மைப்பு* | *வினாத் தாளின் அமைப்பு* | *காலம்* | *புள்ளி கள்* |
|---|---|---|---|
| I ஆம் வினாத் தாள் | பல்தேர்வு | 01 மணித்தி யாலம் | 40 |
| II ஆம் வினாத் தாள் | கட்டமைக் கப்பட்ட வினாக்கள் அல்லது பகுதியள வில் கட்ட மைக்கப் பட்ட வினாக்கள் | 02 மணித்தி யாலங்கள் | 60 |

குறிப்பு 1: I வது ஆனது வினாத்தாள் ஆக விடயம்சார் வினாத்தாள் I வழங்கப்படும் என்பதுடன், அது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும், அத்துடன், II ஆவது வினாத்தாள் ஆக விடயம்சார் அறிவு வினாத்தாள் II வழங்கப்படும். அது 04 பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். அவ்விரண்டு வினாத்தாள்களினதும் உள்ளடங்கியுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.

13.2 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினைத் திறன் காண் தடை தாண்டல்* | *தொடர்புடைய இதவடிவம்* |
|---|---|
| I வது வினைத் திறன் காண் தடை தாண்டல் | 1. ஆசிரியர் தேர்ச்சிச் சட்டகம் மற்றும் ஆசிரியரின் தொழில் வாண்மைத் துவம் |
| | 2. கற்பித்தல் செயன்முறை |
| | 3. கல்விக்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் |
| | 4. கல்வி தொடர்பான சட்டம் |

குறிப்பு 2: சித்தியடைவதற்காக மேலே 13.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

14.0 **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்** :

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள், மாகாண அடிப்படையில் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதிகளாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் அக்குறிப்பிட்ட பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியானது உரிய ஆசிரியர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் மாகாணக் கல்வி அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. அதேபோன்று, பிரிவெனா ஆசிரியர்கள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவிபெறும் விசேட பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கும் தரம் உயர்த்துவதற்கும் உரியதான இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை, விண்ணப்பதாரர்களும் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்டும் பெறுபேற்றுப் பத்திரத்தை விண்ணப்பதாரர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அப் பெறுபேற்றுப் பத்திரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்திக் கொண்டு, உரிய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில், மாகாண/வலயக் கல்வி அதிகாரிகள் உரிய ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கும் மற்றும் தரம் உயர்த்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

V. பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்..

15.0 இந்த பரீட்சை அறிவித்தலின் விதிமுறைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக, கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
“இசுருபாய”
பத்தரமுல்ல,
2026, யூலை 06.

**அட்டவணை I**

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

07-187

**பாதுகாப்பு அமைச்சு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

## இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் (பயிற்சித் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் பதவிகளின் வெற்றிடங்களுக்காக, பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடத்தப்படும்.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப் படையில், திறமை மட்டத்தில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள், இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர் பாடலாளராக 02 வருடப் பயிற்சிக் காலத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அந்தப் பயிற்சியின் இறுதியில் தோற்ற வேண்டிய தகைமைப் பரீட்சையில் சித்தியடையும் அதிகாரிகள், இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர் பாடலாளர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியக் கொடுப் பனவுடையது. 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

   i. இந்த பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப் படுவது, காலநிலை அவதானிப்புத் திணைக் களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் (பயிற்சி) பதவிக்காக ஆகும்.

   ii. எழுத்துப் பரீட்சை - இப்பரீட்சையானது பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

      i. நுண்ணறிவுப் பரீட்சை

      ii. விடயப்பரப்புச் சார்ந்த தொழில்நுட்ப வினாத் தாள்

3. நியமிக்கப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண் ணிக்கைக்கு அல்லது சில வெற்றிடங்களுக்கு சம புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் எண் ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நடைமுறை ஒழுங்குவிதிகள் கோவையின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

3.1 மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 47 வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தகைமை பெறும் விண்ணப்பதாரர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன், வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு தகைமையுடைய உள்வாரி விண்ணப்பதாரர்கள் வானிலை அவதானிப்புத் திணைக்களத்தினுள் இல்லாதிருந்தால் மாத்திரமே எஞ்சிய அளவு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான பொதுவான விதிமுறைகளும் நிபந்தனைகளும்:**

4.1 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் சில வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

4.2. அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.01 ஆம் திகதிய 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள, இனிமேல் விதிக்கப்படும்அல்லதுதிருத்தங்களுக்கும்,நிறுவனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4.3. இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். மேலும், பயிற்சிக் காலத்தின் இறுதியில் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் III ஆம் தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர், நீங்கள் விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் ஒழுங்கிற்கு அமைய, நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

4.4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். கடமை நேரங்கள் எப்பொழுதும் சாதாரண அலுவலக நேரங்களாக அமையாது என்பதுடன், பகல் மற்றும் இரவு ஆகிய இரு வேளைகளிலும் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களிலும் அமையலாம். அத்துடன் முறை அட்டவணையின் (Roster) படியும் கடமையாற்ற நேரிடும்.

4.5 இரண்டு வருடப் பயிற்சியை முழுமையாகப் பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருடப் பயிற்சியின் பின்னர் 05 வருடங்கள் திணைக்களத்தில் கடமையாற்றுவதாகவும் திணைக்களத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும். அத்துடன், அவர் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர் பயிற்சியைக் கைவிட்டால் அல்லது ஒப்பந்தக் காலத்தில் திணைக்களத்தில் கடமையாற்றத் தவறினால், பயிற்சிக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகையையும், ரூபா 250,000.00 கொண்ட ஒரு செல்லுபடியாகும் தொகையையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்குச் செலுத்துவதாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு பிணையாளர்களின் சான்றளிப்புடன் கூடிய பிணை முறிப்பத்திரம் ஒன்றில் பயிற்சி ஆரம்பமாவதற்கு முன்னர் எழுதி கையொப்பமிட வேண்டும்.

4.6 அரச நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு அநுபந்தமான சுற்றறிக்கைகளுக்கு அமைய, குறிப்பிட்ட அரசாங்க கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.7 இணைப்பு மொழியான ஆங்கில மொழி தொடர்பாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் திறமைச் சித்தி (Credit Pass) மட்டத்திலான தேர்ச்சியை, பதவியின் III ஆம் தரத்தில் 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.8 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை குறிப்பிட்ட திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும் / அல்லது நியமிக்கப்பட்ட பதவியொன்றின் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு மறுக்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

5.1 02 வருட பயிற்சிப் காலப்பகுதியில், பயிற்சி பெறும் தரத்திலான இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர்

பதவிகளுக்காக 2025.03.25 திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் இணைப்பீடு VI இன் படி மாதாந்த கொடுப்பனவு பின்வருமாறு வழங்கப்படும்.

| *பதவி* | *மாதாந்த கொடுப்பனவு* | |
|---|---|---|
| | *2026.01.01 திகதி முதல் (ரூ.)* | *2027.01.01 திகதி முதல் (ரூ.)* |
| தொழில்நுட்ப சேவையின் 01 ஆம் ஆண்டு | 43,274.00 | 45,230.00 |
| 02 ஆம் ஆண்டு | 43,730.00 | 45,770.00 |

5.2 2025.03.25 திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி, இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப் பாளர் / தொடர்பாடலாளர் தரம் III, II மற்றும் I ஆகியவற்றுக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 52,250 - 10 x 800-11 x 1,190 -10 x 1,320 - ரூ.100,040.00 (MN 3-2025) ஆவதுடன், நிரந்தர பதவிக்கு நியமிக்கப்படும் போது மேற்கூறிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப சம்பளப்படியினதும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2020 இன் இணைப்பீடு III இன் படியும் சம்பளம் வழங்கப்படும்.

6. **ஆட்சேர்ப்புத் தகைமைகள் :**

(அ) (i) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்மதிப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவை யாற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும் (பதவிச்சேர்ப்பின் பின்னர் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் தகுதி பெறத் தவறின், பதவிக் குத் தகுதியற்றவராகக் கருதப் படுவார்).

(iv) யாதேனும் ஒரு மதப் பிரிவைச் சேர்ந்த துறவறத்தைப் பூண்ட எவரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற மாட்டார்.

(ஆ) கல்வித் தகைமைகள் / தொழில்முறைத் தகை மைகள் / அனுபவம்:

i. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு விசேட சித்தியுடன் (சம்பான) ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. ஒரே அமர்வில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பாடச் சேர்க்கை பின்வரும் ஏதேனும் ஒரு முறையின்படி அமைந்திருத்தல் வேண்டும்.

(1) பௌதிகவியல், தூய கணிதம் மற்றும் பிரயோக கணிதம்

(2) பௌதிகவியலுடன்

(i) தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்று

மற்றும்

(ii) இரசாயனவியல் / விவசாயம் / தகவல் தொழில்நுட்பம் / கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்று

(இ) **வயது** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று குறைந்தபட்ச வயது 18 ஆவதுடன், அதிகபட்ச வயது 30 ஆகும். (இதற்கமைய 2008.08.13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.08.03. ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்ப தற்குத் தகைமை உடையவராவர்.)

(ஈ) தகைமைகளுக்கான எல்லைகள் :

இப் பரீட்சைக்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது, ஆன்லைன் அமைப்பினால் (Online system) வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தல் முறைகளின் கீழ் மாத்திரமே செலுத்த வேண்டும்.

i. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி கட்டண வசதியைக் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறைமை (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :-

(அ) மேற்கூறிய முறைகளின் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள், இணையதளத்தில் தேர்வு தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத் தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரம் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (Email) மூலம் அறிவிக்கப்படும். தேர்வுக்கான முழுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தேர்வுக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகளின் மூலம் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் பிழைகளுக்கு இலங்கைத் தேர்வுத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) தேர்வுக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது அல்லது வேறு எந்தவொரு தேர்வுக்காகவும் மாற்றீடு செய்யப்பட மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை:**

8.1 இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Application – Recruitment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஆன்லைன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஓகத்து மாதம் 13 ஆம் திகதி பி.ப 9.00 மணியுடன் நிறைவடையும்.

8.2 விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது இறுதித் திகதி வரை தாமதிப்பதனால் ஏற்படும் ஏதேனும் பாதகமான சூழ்நிலைகளை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8.3 ஆன்லைன் (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, முறைமைக்குள் (System) பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அறியத்தரப்படும். ஆன்லைன் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instruction) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுங்கள். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித் துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாக விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் இணையவழியில் (Online) மாத்திரம் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையத்தள அறிவித்தல் மூலம் அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கை கடிதமொன்றை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை (Printed copy) தன்னிடம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டையைச் சோதித்துப் பார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு அமைய உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ திருத்தங்களுக்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

8.5 பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதவியணி அதிகாரியைக் கொண்டும், அவ்வாறில்லாத விண்ணப்பதாரர் ஒருவர் தனது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத் தரணி, பகிரங்க நோட்டாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான அல்லது மதத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்ட ஒருவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

8.6 தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், விண்ணப்பப் படிவத்தின் ஒரு பிரதியைத் தமது தனிப்பட்ட கோப்பில் (Personal file) உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்ற ளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன் றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. **தேர்வுக்குத் தோற்றுதல்** :

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மண்டபத்திலேயே தேர்வுக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேர்வு அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி, முதன்முறையாக அந்த மண்ட பத்தில் தோற்றும் நாளில், அதனை அங்குள்ள தேர்வு மண்டப பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு அனுமதி அட்டை இல்லாமல் தேர்வுக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளின் தொகுப்பு இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால், தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். தேர்வு முடிவுகள் தொடர்பாக தேர்வு ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு தேர்வு அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் தேர்வுக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகைமை களைப் பூர்த்தி செய்துள்ளதற்கோ ஆன ஒரு அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

10. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்** :

விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லு படியாகும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை ஓட்டுநர் உரிமம்

அத்துடன், பரீட்சை விண்ணப்பதாரர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மறைக்காமலும், மின்னணு தகவல் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் எவரும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

11. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை** :

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாகவும் துல்லியமாகவும் தகவல் களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதி களுக்கமைய ஏதேனும் ஒரு விண்ணப்பதாரர் தகை மையற்றவர் என அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரருரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் தவறானது என தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கிய தகவலை அவர் திட்டமிட்டு மறைத்திருப்பது தெரியவந்தால், அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழி** :

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும்

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி

மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

13. **ஆட்சேர்ப்பு முறை :**

I. **எழுத்து மூலப் பரீட்சை** :

இவ்வறிவித்தலின் 01 ஆம் பந்தியின் (ii) ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட 02 வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு குறைந்த பட்சம் 40% புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

விடயங்கள் : 01. நுண்ணறிவுப் பரீட்சை
02. பாடவிதானம் சார்ந்த தொழில் நுட்ப வினாத்தாள்

எழுத்து மூலப் பரீட்சையின் பாடத்திட்டம்

| *பாட இலக்கம்* | *பாடம்* | *ஒதுக்கப் பட்ட நேரம்* | *புள்ளி கள்* | *சித்திப் புள்ளி கள் (குறை ந்த பட் சம்)* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தி யாலங்கள் | 100 | 40% |
| 02 | பாட விதானம் சார்ந்த தொழில் நுட்ப வினாத் தாள் | 02 மணித்தி யாலங்கள் | 100 | 40% |

(அ) **நுண்ணறிவுப் பரீட்சை :**

இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, 50 பல்தேர்வு மற்றும் குறுந்தொகுப்பு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) **பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் :**

இவ்வினாத்தாளானது பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் பாடங்கள் தொடர்பாக க.பொ.த. (உயர் தர) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான இயக்கவியல், அலகுகளும் பரிமாணங்களும், பதார்த்தத்தின் இயல்புகள், அதிர்வுகளும் அலைகளும், வெப்பமும் மின்சாரமும், மின்சாரக் கொள்கைகள், அரைகடத்திகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், பல்வேறு தகவல் தொடர்பு மற்றும் தரவுப் பரிமாற்ற முறைகள் ஆகியன குறித்த விண்ணப்பதாரரின் அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

02. **நேர்முகப் பரீட்சை :**

(அ) எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து, முன்னுரிமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைசபையொன்றினால் விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**கவனிக்கவும்** : நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதானது நியமனத்தை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

14. நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுப் பத்திரத்தை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெறு பேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது குறித்து வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளுக்கு அமைய செயற்படக் கடமைப்பட்டுள்ளனர்.

16. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கமற்ற தன்மைகள் காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின் படியே நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ. எல். கே. விஜேமான்கே,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்
பௌத்தாலோக்க மாவத்தை
கொழும்பு 07,
2026.07.06.

07-195/1

## பாதுகாப்பு அமைச்சு

## வளிமண்டலவியல் திணைக்களம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் (பயிற்சி தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

1.0 வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாக வுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் பதவிகளின் வெற்றிடங்களுக்காக, பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய வளிமண்டலவியல் திணைக்கள ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடத்தப்படும்.

1.1 **பதவி பெயர்** : வானிலை அவதானிப்பாளர் / தொடர் பாடலாளர்

1.2 பதவியின் கடமைகளின் தன்மை

- வானிலை தரவுகளை சேகரித்தல்
- வானிலை கருவிகளை பராமரித்தல்
- வெளிப்புற நிறுவனங்களுக்கு வானிலை தரவு களை வழங்குதல்
- வானிலை தரவுகளை இணையப்பக்கத்தில் பதி வேற்றுதல்
- விசேட வானிலை தரவுகள் குறித்து அவதானமாக இருத்தல் மற்றும் அவற்றை அறிக்கையிடல்

2.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படை யிலான திறமையின் மீது, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில் நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளராக 02 வருட பயிற்சி காலத்திற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். இப்பயிற்சியின் இறுதி யில் தோற்ற வேண்டிய தகைமைப் பரீட்சையில் சித்தி யடையும் உத்தியோகத்தர்கள் இலங்கை தொழில் நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பிரதிநிதித்துவப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட் பட்டதாகும்.

i. இப்பரீட்சையின் மூலமான ஆட்சேர்ப்பானது, வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப் பாளர் / தொடர்பாடலாளர் (பயிற்சி) பதவிக்காக மாத்திரமேயாகும்.

ii. **எழுத்துப் பரீட்சை** : இப்பரீட்சையானது பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்

   i. கணித அடிப்படை அறிவு வினாத்தாள்

   ii. பதவி சார்ந்த அடிப்படை அறிவு வினாத்தாள்

3.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி ஆகியவை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும், மேலும் சம புள்ளிகள் காரணமாக வெற்றிடங்களை விட அதிகமான விண்ணப்பதாரர்கள் இருந்தால், நடைமுறை விதித் தொகுப்பின் 92 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவுப்படி முடிவு செய்யப்படும்.

i. மொத்த வெற்றிடங்களில் 19 வெற்றிடங்கள் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் தகைமை பெறும் விண்ணப்பதாரர் களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அதே வேளை, வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப் படுவதற்கான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உள்ளக விண்ணப்பதாரர்கள் வளிமண்டலவியல் திணைக்களத்திற்குள் இல்லாதிருந்தால் மாத்திரமே, எஞ்சிய அளவு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தேர்ந் தெடுக்கப்படும் வெளிவாரி விண்ணப்ப தாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

4.0 சம்பளம் பின்வருமாறு வழங்கப்படும்.

4.1 வரையறுக்கப்பட்ட பிரிவின் கீழ் பயிற்சித் தரத்திற்குள் உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்கள், பயிற்சித் தரத்திற்குள் நுழைவதற்கு முன்னர் பெற்ற அதே சம்பள அளவீட்டில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதுடன், பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து திணைக்களத்தினால் நடத்தப்படும் பயிற்சித் தரத்திற்குரிய இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் வரை, இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இன் ஆரம்பச் சம்பள அதிகரிப்பிற்கு நிகரான வருடாந்த கொடுப்பனவொன்று சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும்.

4.2 பயிற்சித் தரத்தின் முதலாம் வருடத்தை திருப்தி கரமான முறையில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர் ஒருவர், இரண்டாம் வருடத்தில் தான் இதுவரையில் இருந்த சம்பள அளவீட்டின் அடுத்த சம்பளப் படியில் நிலைப்படுத்தப்படுவார் என்பதுடன், 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு இரண்டாம் வருடத்திற்கும் உரித்தாகும்.

4.3 2025.03.25 ஆம் திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி,

இலங்கை தொழில்நுட்ப சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் தரம் III, II, மற்றும் I ஆகியவற்றுக்குரிய சம்பள அளவீடு ரூபா 52,250 - 10 x 800 - 11 x 1,190 -10 x 1,320 - 10 x1,350 - ரூபா 100,040.00 (MN 3 – 2025) ஆகும்.

4.4 பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர், இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டதன் பின்பு, 2025.03.25 ஆம் திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி, உரிய சம்பளத் தட்டில் நிலைப்படுத்துவதற்காக சம்பளப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, உரிய சம்பளத் தட்டில் நிலைப்படுத்தி சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**5.0 சேவையில் அமர்த்துவதற்கான பொதுவான விதிகளும் நிபந்தனைகளும்:**

5.1 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி ஆகியவை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு வெற்றிட எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

5.2 அரசாங்க சேவையின் நியமனங்களை ஆளுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1930/12 மற்றும் 2015.09.01 ஆம் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள, இனிமேல் விதிக்கப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும், நிறுவனக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் 02 வருட பயிற்சிக் காலத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.3 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றக் கடமைப் பட்டவர்களாவர்.

5.4 கடமை நேரங்கள் எப்போதும் சாதாரண அலுவலக நேரங்களாக அமையாது என்பதுடன், பகல் மற்றும் இரவு ஆகிய இரு வேளைகளிலும் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் அமையலாம். பணிப் பட்டியல்களுக்கு (Roster) அமைவாகவும் கடமையாற்ற நேரிடும்.

5.5 இரண்டு வருடப் பயிற்சியை முழுமையாகப் பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருடப் பயிற்சியின் பின்னர் 05 வருடங்கள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும் திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபட வேண்டும் என்பதுடன், அவர் பயிற்சியின் ஆரம்பத் திகதிக்கு பின்னர் பயிற்சியைக் கைவிட்டால் அல்லது ஒப்பந்தக் காலத்தை திணைக்களத்தில் சேவையாற்றத் தவறினால், பயிற்சிக்காக அரசாங்கத்திற்குச் செலவான தொகையையும் ரூபா 250,000.00 கொண்ட செல்லுபடியாகும் தொகையையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு செலுத்துவதாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிணையாளர்கள் இருவரின் சான்றளிப்புடன் கூடிய பிணைமுறியொன்றை பயிற்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் எழுதி கையொப்பமிட வேண்டும்.

5.6 அரச மொழி அல்லாத மொழிமூலமொன்றில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், தகுதிகாண் காலத்திற்குள் அரச மொழப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுதல், அடுத்த சம்பள அதிகரிப்பு பிற்போடப்படுவதற்கு ஏதுவாகும்.

5.7 நிரந்தர நியமனத் திகதியிலிருந்து 03 வருடங் களுக்குள் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைய, உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அவ்வாறான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளத்தவறின், அத்தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் வரை சம்பள உயர்வு நிறுத்தப்படும்.

6.0 **தகைமைகள்** :

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வானிலை அவதானிப்பாளர் / தொடர்பாடலாளர் பயிற்சித் தரத் திற்குப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்வரும் தகை மைகள் பொருந்தும்.

6.1 **கல்வித் தகைமைகள் :**

(a) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் (Credit Pass) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

6.2. **அனுபவம் :**

(a) ஆரம்பக் கைத்தொழில் அல்லாத அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகையைச் சார்ந்த, தொடர்புடைய துறையிலான நிரந்தர

திணைக்களப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது பத்து (10) வருடங்கள் செயற்திறனான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.3 **உடற்தகுதி மற்றும் மனத்தகுதி :**

(a) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 **ஏனைய விபரங்கள் :**

i. பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. குறித்த திகதிக்கு முன்னையதாக அரசாங்க சேவையில் நிரந்தர, திணைக்களப் பதவியொன்றின் கீழ் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் செயற்திறனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், அது திணைக்களத் தலைவரினால் சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. சேவைக்கு நியமிப்பதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, அதிகாரி தனது அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எவ்வகையிலேனும் முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமேயாகும்.

7.0 **பரீட்சை நடைமுறை** :

7.1 இந்தப்பரீட்சை கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடத்தப்படுவதுடன், இது சிங்களம், தமிழ், ஆங்கில ஊடகங்களில் நடத்தப்படும். விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய ஒரு ஊடகத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அந்த ஊடகத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

| *பாடம்* | *பெறக்கூடிய மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்குப் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி வீதம்* | *நேரம்* |
|---|---|---|---|
| அடிப்படை கணித அறிவு வினாத்தாள் | 100 | 40% | 02 மணித்தியாலங்கள் |
| பதவிக்குரிய அடிப்படை அறிவு வினாத்தாள் | 100 | 40% | 02 மணித்தியாலங்கள் |

7.2 **பாடத்திட்டம்:**

i. அடிப்படை கணித அறிவு வினாத்தாள் :

இயற்கணிதம், வடிவியல், திரிகோணமிதி ஆகிய பாடங்கள் தொடர்பான க.பொ.த. (சா/தர) மட்டத்திலான

I பகுதி - 40 பல்தேர்வு வினாக்கள். (புள்ளிகள் 2.5 x 40 = 100)

II பகுதி - கட்டுரை வடிவிலான விடைகள் எதிர்பார்க்கப்படும் ஒரு வினாத்தாளைக் கொண்டிருப்பதுடன், 07 வினாக்களுள் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். (புள்ளிகள் 20 x 5 = 100)

ii. பதவிக்குரிய அடிப்படை அறிவு வினாத்தாள்:

கட்டுரை வடிவிலான விடைகள் எதிர்பார்க்கப்படும் ஒரு வினாத்தாளாகும். வழங்கப்படும் 07 வினாக்களுள் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். (புள்ளிகள் 20 x 5 = 100)

7.3 **பரீட்சை பெறுபேறுகள்** :

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து சாதாரண நேர்முகப்பரீட்சைக்குத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களின் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானவர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். அதன் பின்னர், வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாடு பெறப்பட்டதும், அனைத்து விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படுவதன் ஊடாக அல்லது தபால் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை பெறுபேறுகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

8.0 **தெரிவு நடைமுறை :**

8.1 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து, நிரப்ப எதிர் பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை பெறுபேறுகளின் திறமை வரிசைக்கு (தகுதி அடிப்படையில்) ஏற்ப சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

8.2 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்காகப் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

9.0 **நியமனம்** :

9.1 பயிற்சித் தரத்திற்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் இரண்டு வருட பயிற்சியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டதுடன், 1 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

10.0 **போலித் தகவல்களுக்கான தகைமை நீக்கம் / தண்டனை** :

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகைமை இல்லை எனத் தெரியவந்தால் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் தவறானது எனத் தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்தால், பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அவரது விண்ணப்பதாரித்தகைமை இரத்துச் செய்யப்படலாம் என்பதுடன், சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் அது தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படவும் கூடும்.

11.0 **விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, ஆன்லைன் (மார்க்கமுறை) கட்டமைப்பினால் வழங்கப்படும் கட்டணச் செலுத்துகை முறைகளின் கீழ் மாத்திரமே கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

(i) எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card)

(ii) இணையவழி செலுத்துகை வசதியைக் கொண்ட எந்தவொரு வங்கி பற்று அட்டை மூலமாகவும் Any Bank Debit Card with the Facility of Internet Transactions))

(iii) இலங்கை வங்கி இணைய வங்கி முறைமை / Flex செயலி (Online Banking Method/ Flex App of Bank of Ceylon)

(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமாகவும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(a) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் செலுத்துகைகளை மேற்கொள்ளும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள், இணையத்தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(b) செலுத்துகை கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட செலுத்துகை முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் சம்பந்தமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(c) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்பட மாட்டாது.

11.1 இதற்கான விண்ணப்பப்பத்திரம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் "Our Services" என்பதன் கீழ் உள்ள "Online Application – Recruitment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை ஆன்லைன் (மார்க்கமுறை) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஆன்லைன் மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பி.ப 9.00 மணியுடன் நிறைவடையும்.

❖ அதிகாரிகள் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட கோப்பில் (Personal File) உட்படுத்துவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத்

தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப் பப்பத்திரத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

❖ விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எவ்விதமான பாதகமான சூழ்நிலை களையும் விண்ணப்பதாரரே எதிர்கொள்ள வேண்டும்.

11.2 தோற்றுகின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்று வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதால், விண்ணப்பப் பத்திரத்தை சரியாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.3 தெரிவு செய்யப்படுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப் படும் முதலாலெழுத்துக்களுடனான பெயருக்கு மாத்திரமே வழங்கப்படும் என்பதால், பெயரைச் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

11.4 ஆன்லைன் (Online) பரீட்சை விண்ணப்பப் பத்திரத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும்.

11.5 ஆன்லைன் (Online) மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி (Soft copy) செல்லுபடியாகும் விண் ணப்பப்பத்திரமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / இல்லையா என்பது, முறை மையினுள் (System) பிரவேசிப்பதற்குப் பயன் படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். ஆன்லைன் விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instruction sheet) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுங்கள். விண்ணப்பப்பத்திரத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் (Printed copy) பெற்றுக் கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எவ்வித திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

12.0 **பரீட்சை அனுமதிப் பத்திரங்கள்:**

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கூட்டிய அனு மானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஆன்லைன் (Online) மூலமாக மாத்திரமே அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன், அது பற்றிய விபரம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இணையத்தள அறிவித்தல் ஊடாக / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அறிவிக்கப்படும். தனது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனசார் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி (Photo copy) மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி என்பவற்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, அதில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப்பரீட்சையின் போது திருத்தங்களுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

13.1 இந்தப்பரீட்சை 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஊடகங் களில் நடாத்தப்படும்.

13.2 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரத்தில் தங்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் (சான்றொப்பம்) கொள்ள வேண்டும். பரீட்சை நிலையத்தின் போது பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் (சாலாதிபதி) தங்களது கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்தியொருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

13.3 பரீட்சை நடாத்துகை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும்

விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்பட நேரிடும்.

14.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

❖ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப மேற்பார்வையாளர் (சாலாதிபதி) திருப்தியடையும் வகையில் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை (National Identity Card) )
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு (Valid Foreign Passport))
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் (Valid Sri Lankan Driving License)

மேலும், பரீட்சார்த்திகள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும், மின்னணுத் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த முனையிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

15.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது குறித்து வானிலை அவதானிப்பு பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு இணங்கச் செயற்படக் கடமைப்பட்டுள்ளனர்.

16.0 சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிப் பாடங்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கமற்ற தன்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ.எல்.கே.விஜேமான்னகெ
பணிப்பாளர் நாயகம்
வானிலை அவதானிப்புத் திணைக்களம்.

வானிலை அவதானிப்புத் திணைக்களம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2026, யூலை 06.

07-195/2

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இந்தத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள நிறைவேற்றுச் சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) தகுதியானவர்களைத் தேர்வு செய்வதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதிக் கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 8 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த ஆட்சேர்ப்பு நடைபெறுவதுடன், அவை அனைத்தையும் அல்லது சிலவற்றை மட்டும் நிரப்புவது அல்லது எதையும் நிரப்பாதிருத்தல் தொடர்பான இறுதி தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியது. நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இந்தப் பரீட்சை 2026 ஒக்டோபர் மாதம் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும்.

விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Service"என்ற பிரிவில் "இணைய விண்ணப்பங்கள் – ஆட்சேர்ப்புத் தேர்வுகள் / E.B. தேர்வுகள்" என்ற பிரிவில் கிடைப்பதுடன், விண்ணப்பங்களை இணைவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்வது 2026.07.13 ஆந் திகதி மு.ப 09.00 மணிக்குத் தொடங்கி, 2026 08.10 ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும்.

தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவருக்கு கையளிக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்

இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2026. 08.10

1. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கமைய SL 1-2025 சம்பள அளவுத்திட்டத்தின் படி ரூ. 82,150 – 10×2,400 – 8×2,940 – 17×3,900 – 195,970/- (மாதாந்தம்) என்ற சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

2. **சேவையில் நியமனம் செய்யும் நிபந்தனைகள்:**

I. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனை களுக்கும், அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறை வேற்றுச் சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ள ஏற்பாடுகளுக்கும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக் கோவை ஏற்பாடுகளுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் முறை விதிகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப் படும் விண்ணப்பதாரர்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதி (புள்ளி விபரவியலாளர் பதவி) III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

II. 2017/21 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, இந்த நியமனம் ஓய்வூதியத்துடன் கூடியதாகும். உங்களுக்கு உரிய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் உட்பட வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிக்க வேண்டும். அரசாங்கம் அவ்வப்போது நிர்ணயிக்கும் வகையில் நீங்கள் அதற்கான பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

III. இந்த பதவிக்கு நியமிக்கப்படும் உத்தி யோகத்தர்கள் 03 வருட தகுதிகாண் காலத் திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

IV. நிறைவேற்றுச் சேவை வகுதி III ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் முதலா வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட் சையில் சித்தியடைய வேண்டும்.

V. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும், அரச மொழிக் கொள் கையை நடைமுறைப்படுத்துவதற்காக தற் போது நடைமுறையில் உள்ள மற்றும் எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங் கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குகளுக்கும் அமைவாக செயல்பட வேண்டும். அதன்படி தற்போது நடைமுறையில் உள்ள 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக் கைகளின்படி, பதவியில் நியமிக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் தொடர்புடைய மட்டத்தில் உள்ள மற்ற அரச மொழி/மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

VI. தங்களுக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமை களை நிர்ணயிக்கப்பட்ட நாளில் பொறுப் பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப் பட்ட பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப் பேற்க மறுக்கும் அல்லது தவிர்க்கும் விண் ணப்பதாரர்களின் நியமனங்கள் இரத்து செய் யப்படக்கூடும்.

3. **கல்வித் தகைமைகள் :**

(அ) புள்ளிவிபரம், கணிதம், பொருளாதாரம், மக்க ளியல், சனத்தொகை ஆய்வு, கணினி விஞ் ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூக விஞ்ஞானம் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ள,

a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப் பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முதலாம் வகுப்பு (First Class) தரத்துடன் கூடிய சிறப்பு பட்டப்படிப்பு (Special Degree)

அல்லது

(ஆ) புள்ளிவிபரம், கணிதம், பொருளாதாரம், மக்களியல், சனத்தொகை ஆய்வு, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூக விஞ்ஞானம் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ள,

a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

c) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) தரத்துடன் கூடிய பொதுப் பட்டப்படிப்பு (General Degree) பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:

i. சிறப்பு பட்டப்படிப்பு சான்றிதழில் குறிப்பிட்ட பாடப்பிரிவு தெளிவாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில், அந்த குறிப்பிட்ட துறையை கற்ற காலப் பகுதியில் பெற வேண்டிய மொத்த கிரெடிட் மதிப்பில் 2/3 க்கு சமமான அல்லது அதற்கு அதிகமான மதிப்பை பெற்ற பாடப்பிரிவே அந்த சிறப்பு பட்டப்படிப்பு பாடநெறியின் பிரதான பாடமாகக் கருதப்படும்.

ii. பொதுப் பட்டப்படிப்புடன் (General Degree) தொடர்புடைய பாடங்களுக்கு வழங்கப்படும் மொத்த கிரெடிட் மதிப்பில் 1/3க்கு சமமான அல்லது அதற்கு அதிகமான மதிப்பைப் பெறும் பாடமே அந்த பட்டப்படிப்பின் பிரதான பாடமாகக் கருதப்படும்.

4. **உடல் தகுதிகள் :**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றத் தேவையான அளவில் உடல் ரீதியாக தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

II. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான உடல் தகுதி உடையவராக இருக்க வேண்டும்.

5. **வயது வரம்பு :**

வயது 21 முதல் 35 வரை இருக்க வேண்டும்.

“அதன்படி 2005.08.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1991.08.10 திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே இந்த பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.”

6. **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கநெறி கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

III. பதவிக்கான அனைத்து தகுதிகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

7.1 **எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகத் தேர்வு :**

7.1.1. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் பாடத்திட்ட சார்ந்த பொது அறிவு மற்றும் உளச்சார்பு ஆகிய பாடப் பிரிவுகளுக்கான எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து, அதிகபட்ச புள்ளிகள் பெற்றவர்களின் திறமை வரிசை மற்றும் வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் அந்த ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் தகுதி பரிசோதனை பொதுநேர்முகத் தேர்வு குழுவிற்கு அழைக்கப்படுவர். அங்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளும், அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகுதிகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதா மற்றும் உடல் தகுதி உள்ளதா என்பது பரிசோதிக்கப்படும். அதன் பின்னர் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சை மதிப்பெண்களின் திறமை வரிசைப் படி இந்த பதவிக்கு தேர்வு செய்யப் படுவர்.

பொதுநேர்முகத் தேர்வுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது. நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவது நியமனத்திற்கு உரிய தகுதியாக கருதப்படாது.

7.1.2 **பாடத்திட்டம் :**

பொதுஅறிவு (பாடம் சார்ந்த) – காலம்: 2 மணி நேரம் (அதிகபட்ச மதிப்பெண்: 100)
(தேர்ச்சி மதிப்பெண்: 40%)

- உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளி விபரங்கள்
- புள்ளிவிபரமும் சமூக அபிவிருத்தியும்
- புள்ளிவிபரங்களுடன் தொடர்புடைய புதிய போக்குகள்
- சமூக பொருளாதார தகவல்கள்
- சூழல் மற்றும் சமூகம்
- புவியியல் காரணிகள் மற்றும் சமூகம்
- தகவல் தொழில்நுட்பம்

உளச்சார்பு– காலம்: 1 மணி நேரம் (அதிகபட்ச புள்ளிகள்: 100)
(சித்தியடையும் புள்ளிகள் அளவு: 40%)

- பிரச்சினைகளை அடையாளம் காணல், அவற்றுக்கான காரணங்களை கண்டறிதல், முடிவெடுத்தல், ஆளிடைத் தொடர்புகள், தொடர்பாடல் திறன், சுய ஒழுக்கம், கொள்கை மற்றும் மூலோபாயங்களை உருவாக்குதல் போன்ற

முகாமைத்துவ திறன்களை மதிப்பிடும் வகையில் கேள்விகள் மற்றும் நிலைமைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

7.1.3 பரீட்சை பெறுபேறு வெளியீடு

நியமன அதிகாரியினால் பெறுபேறுகள் வெளியிடுவதற்கான தகுந்த திகதியை அறிவித்த பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள்/ மொத்த புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறு பேற்று அறிக்கை, பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்படவோ அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளம் மூலம் வெளியிடப்படவோ, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

8. **பரீட்சை நிபந்தனைகள் :**

"பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்."

I. இந்த பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்கு தோற்றலாம். ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழி ஊடகத்தில் பதிலளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இரு வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்ட பரீட்சை மொழிமூலம் பின்னர் மாற்ற அனுமதிக்கப்படாது. விண்ணப்பதாரர்கள் ஒதுக்கப் பட்ட பரீட்சை மையத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

II. பரீட்சை கட்டணம் ரூ.1200.00 ஆகும். கட்டணத்தை ஒன்லைன் முறையில் கீழ்க்கண்ட வழிமுறைகளில் மட்டும் செலுத்த வேண்டும்:

i. எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலம்
ii. இணைய பரிவர்த்தனை வசதியுள்ள எந்த வொரு வங்கி டெபிட் அட்டை மூலம்
iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறை / "Flex" செயலி மூலம் (Online Banking Method/ "Flex" App of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும்

• குறிப்பு :-

(அ) மேலே குறிப்பிடப்பட்ட முறைகளின் மூலம் கட்டணம் செலுத்தும் விதம் தொடர்பான வழிமுறைகள், இணையத் தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டதாக SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக் கப்படும். பரீட்சை கட்டணத்தின் முழு தொகையும் செலுத்தப்பட வேண்டும். குறைவாக அல்லது அதிகமாக செலுத் தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் பிழைகளுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்ட ணம் எந்த காரணத்திற்காகவும் திருப்பி வழங்கப்படமாட்டாது அல்லது வேறு ஒரு பரீட்சைக்கு மாற்றப்படமாட்டாது.

III. ஒன்லைன் (online) விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியூடாக சமர்ப்பித்த மென்பிரதி (soft copy) பரீட்சைத் திணைக்களத்துக்கு கிடைத்த பின்னர், அது செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக் கொள்ளப்படாததா என்பதை, விண்ணப்பத்திற்காக பயன்படுத்திய கைத்தொலைபேசி எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அறிவிக்கப்படும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அதில் உள்ள வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி யொன்றை பெற்றுக்கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்த மாற்றமும் செல்லுபடியாகாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும்.

IV. ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை (Admission Card) வழங்கப்படுவது, அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது அந்தப் பதவிக்குத் தகுதியுடையவர் என்று கருதப்படுவதாக அர்த்தமாகாது. மேலும், இந்த அறிவிப்பின் 3வது பத்தியில் (i) / (ii) குறிப்பிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், அறிவிப்பின் 7.1.2 உபபிரிவில் குறிப்பிடப்பட்ட தேர்ச்சி புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் அந்த விண்ணப்பதாரர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட தகுதியற்றவராக இருப்பார்.

**தவறான தகவல்களுக்கு தண்டனை** :- விண்ணப் பத்தை நிரப்பும் போது மிகுந்த கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். பரீட்சை விதிமுறைகளின் படி ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் (பரீட்சைக்கு

முன், பரீட்சை நடக்கும் போது அல்லது பிறகு) கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம்/தேர்வு தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

V. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகுதிகளை கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒன்லைன் முறையில் பரீட்சை அனுமதி அட்டைகள் (Admission Cards) வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக இணைய அறிவிப்பின் மூலமாகவும்/அல்லது விண்ணப்பதாரர்களுக்கு SMS மூலமாகவும் அறிவிக்கும். அனுமதி அட்டை கிடைக்காத விண்ணப்பதாரர்கள், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டபடி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு பிரிவை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது, விண்ணபதாரர் பரீட்சையின் பெயர், முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு, இணைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் அனுப்ப வேண்டும். அவ்வாறு தொடர்பு கொள்ளும்போது தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபத்தின் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையை பரிசீலித்து தேவையான திருத்தங்கள் இருந்தால், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தை தொடர்பு கொண்டு அவற்றை திருத்திக் கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்காணலில் மாற்றங்கள் கோரப்படின் அவை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VI. பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிஅட்டை பரீட்சையின் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

VII. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

VIII. பரீட்சையை நடத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் அனைத்து விதிமுறைகளுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவற்றை மீறினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்படுவார்.

09. விண்ணப்பதாரரின் அடையாளம்: பரீட்சை மண்டப கண்காணிப்பாளர் திருப்தி அடையும் வகையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்காணும் அடையாள ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணபதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

10. **நேர்முகப் பரீட்சை :**

I. எழுத்துப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் விண் ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:

a) பிறப்பு சான்றிதழ்

b) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு

c) பட்டப்படிப்பு சான்றிதழ் (பட்டச் சான்றிதழ் மற்றும் விரிவான பட்டச் சான்றிதழ்) மற்றும் தொடர்புடைய பிற கல்விச் சான்றிதழ்கள்

d) இரண்டு (02) நன்நடத்தைச் சான்றிதழ்கள் (இவற்றில் ஒன்று கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்டு 6 மாதங்களை தாண்டாத சான்றிதழாக இருக்க வேண்டும்)

e) நீங்கள் பயன்படுத்தும் பெயர் மற்றும் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிற சான்றிதழ்களில் உள்ள பெயர் இடையே சிறிய வேறுபாடு இருந்தால், அந்த வேறுபாட்டை விளக்கு

வதற்கான முறையான உறுதிமொழிப் பிரகடனம் (Affidavit). இதில் தொடர்புடைய சான்றிதழ்களில் உள்ள பெயர்கள் தனித்தனியாக குறிப்பிடப்பட்டு, அவை ஒரே நபரை குறிக்கின்றன என ரூபா 50.00 பெறுமதியான இரத்துச் செய்யப்படாத முத்திரைத் தாளில் உங்கள் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்டு, சமாதான நீதவான் அல்லது உறுதிமொழி ஆணையாளர் (Commissioner for Oaths) மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

f) தொழில்முறை தகுதிச் சான்றிதழ்கள் (இருக்குமாயின்)

g) சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் மொழிகளில் பெற்ற உயர்ந்த கல்வித் தேர்ச்சி சான்றிதழ்

II. ஒரு விண்ணப்பதாரர் தகுதி இல்லாதவர் என எந்த நேரத்திலும் (பரீட்சைக்கு முன், பரீட்சை நடைபெறும் போது அல்லது பின்னர்) கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். பரீட்சைக்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் ஏதேனும் தவறான தகவல் வெளிப்பட்டால் அல்லது முக்கியமான தகவல் மறைக்கப்பட்டிருந்தால், அவர் பணியில் இருந்து நீக்கப்படலாம்.

11. இவ் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத மற்றும் இந்த ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே சரியானவையாக கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

செயலாளர்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு

2026.

07-184

---

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2026

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடு களுக்கு அமைய அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2026 ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. (i) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத் தினால் பணிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். பரீட் சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை மீறுமிடத்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

03. **பரீட்சைக் கட்டணங்கள்** :

பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும். முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு முதல் அமர்வில் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு அமர்வுக்கும் ஒரு பாடத்துக்கு ரூ.500.00 பரீட்சைகக் கட்டணமும் முழுப் பரீட்சைக்கும் ரூபா 1500.00 பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இந்தப் பரீட்சைக் கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலங்கை வங்கி பத்தரமுல்லை கிளையின் கணக்கிலக்கம் 7041443 க்கு இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம்

வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்). எக் காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பப்படிவம் :**

விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி தயாரிக் கப்படுதல் வேண்டும். அந்த மாதிரிப் படிவத்திற்கு அமைய A4 அளவிலான தாளில் இரண்டு பக்கங் களையும் பயன்படுத்தி 01 இலிருந்து 07 வரையிலான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் எஞ்சியவை அடுத்த பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது, பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து தயாரித்துக்கொள்ள முடியுமெனினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் பரீட்ச்சார்த்தியின் கையெழுத்தினால் பூரணப்படுத்தல் வேண்டும். அதற்கமைய தயாரித்துக்கொண்ட விண் ணப்பப்படிவத்தை பரீட்சார்த்திகள் திணைக்களத் தலைவர் ஊடாக 2026.08.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு, குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடி யகல்வுத் திணைக்களம், "சுஹுருபாயா", பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இன்றேல் நிர்வாகப் பிரிவில் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்துடன் இணங்குகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். (பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி யொன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

05. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களின் அடையாளத்தினை நிரூபிக்கும் பொருட்டு தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைக்காது மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும், தமது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். அத்துடன், பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது அடை யாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்பாகவும் மண்ட பத்தினை விட்டு விலகிச் செல்லும் வரையிலுமான பரீட்சையின் முழு நேரத்திலும் தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைத்தலாகாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தகை மைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பிரகாரம், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகளுக்கு எழுத்துமூலப் பரீட்சைக்காக இலங்கை நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அது தொடர்பில் 0112101553 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு (நிர்வாகம்) அறிவித்தல் வேண்டும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-5980252 அல்லது 011-5980236 ஊடாக வார நாட்களில் வேலை நேரத்தில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை அது தொடர்பில் வினவ முடியும். அவ்வாறு வினவும் போது பரீட்சார்த்தியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் வினவும் ஏதேனும் விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பத்தின் பிரதியினையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியினையும் விண்ணப்பத்தினை அனுப்பிவைத்த பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டினையும் கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

07. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம், நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி யொருவர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தனது அனுமதி அட்டையில் குறித்துரைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவர் மூலம் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே பரீட்சை நிலைய அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும்

பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரி ஒருவரின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பான அனைத்து விடயங் களுக்கும் ஏற்புடையதாகும். விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் நிகழும்; எந்தவித மாற்றங்களும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

09. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர் களினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். இதன் பொருட்டு பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது.

10. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஊடக மொழியாக, போட்டிப் பரீட்சை யொன்றின் மூலம் அரசாங்க சேவையில் நியமனம் பெற்றவர் எனின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் நியமனம் பெற்றிருப்பின் அரசாங்க சேவையில் இணைவதற்காக தகைமை பெற்ற பரீட்சையில் தோற்றிய ஊடக மொழியையும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து பாடங்களுக்கும் ஒரே ஊடக மொழியில் தோற்றுதல் வேண்டும். அத்தோடு விண்ணப்பித்த ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சைத் திட்டம் :**

1. **பரீட்சையின் பெயர்:**

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

2. **பரீட்சை தொடர்பான விபரம்** :

| | *பாடம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | குடி வருவோர் மற்றும் குடியகல் வோர் சட்ட ஏற்பாடுகள் I | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02 | குடி வருவோர் மற்றும் குடி யகல் வோர் சட்ட ஏற்பாடுகள் II | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 03 | தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

3. **பரீட்சையை நடாத்தும் அதிகாரி :**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்

4. **பரீட்சை எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும் :**

ஒரு வருடத்தில் இரண்டு முறை

5. **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *பாட இலக்கமும் பாடமும்* | *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | குடி வருவோர் மற்றும் குடியகல் வோர் சட்ட ஏற்பாடுகள் I | 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சீன வம்சாவளியுள்ள ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம். இந்தச் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் |

| *பாட இலக் கமும் பாடமும்* | *வினாப் பத்திர த்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 02 | குடி வரு வோர் மற்றும் குடி யகல் வோர் சட்ட ஏற் பாடு கள் II | 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டம் மற்றும் அதன் திருத் தங்கள்,<br>1977 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க நாடுகடத்தல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்.<br>இந்தச் சட்டங்களுக்கு பின்னைய காலங்களில் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.<br>குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் பகுதி V இன் XI, XII, XIII, XIV, XV அத்தியாயங்கள். |
| 03 | தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் II, IV, VII, XII, XIII, XIV, XLVII, XLVII, மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்<br>நிதி ஒழுங்கு விதிகள் (நி.ஒ. 2(1) 135, 136,137,138,139 மற்றும் நி.ஒ. IV, VI அத்தியாயங்கள்) |

குறிப்பு :

* மேலுள்ள பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும்.
* உரிய காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அதன் பின்னர் வரக்கூடிய சம்பள ஏற்றம் பின்போடப்படுவதற்கு காரணமாக அமை யலாம்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கு தகைமைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதாக அமையமாட்டாது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாமை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ.சமிந்த பத்திராஜா,
குடிவரவு மற்றும் குடியகல்வுத்
கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாயா,
பத்தரமுல்லை,
2026, யூன் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026**

**First Efficiency Bar Examination for Authorized Officers Grade II of the Department of Immigration and Emigration - 2026**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ......
..............................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் எழுதுக. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):

...............................................................................
..................................................................

(உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.)

1.3 முழுப் பெயர் : ..........................................................................................................................

(சிங்களத்தில்/ தமிழில்)

02. 2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ………………

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : …………………

(சிங்களத்தில்/ தமிழில்)

2.3 தனிப்பட்ட முகவரி : ……………………………………………………………………………

(சிங்களத்தில்/ தமிழில்)

03. பால்நிலை :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

05. கையடக்க தொலைபேசி இல. :

06. தொலைபேசி இலக்கம் (இல்லம்) :

07. மின்னஞ்சல் முகவரி :

08. தாங்கள் இம்முறை தோற்றும் பாடம் / பாடங்கள்:

| *தொ. இல.* | *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

10. தற்போது வகிக்கும் பதவி:

10.1 பதவி : ....................................................................................

10.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: ...............................................................

11.11.1 தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையா? .......................................................

11.2 முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றாத விடத்து செலுத்திய பரீட்சைக் கட்டணம்: ..........

11.3 பற்றுச்சீட்டு இலக்கம் : ...............................

11.4 திகதி : .............................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் (ஏற்புடையதாயின் மாத்திரம்) பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.) |

12. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவையெனவும் மேலே குறிப்பிட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவன் எனவும் பரீட்சைக் கட்டணம் ரூபா ………………… செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளதெனவும் மேலும், இந்தப் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அனைத்து சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

................................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி : ................................

(தனது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பம் இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் முன்னால் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்)

13. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் வகுதியைச் சேர்ந்த மற்றும் தனிப்பட்ட ரீதியில் அறிந்த திரு./ திருமதி/செல்வி ......................................................................................... எனது முன்னிலையில் ………… ஆம் திகதி அவரது கையொப்பம் இட்டார் என்பதையும் விதித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

பெயர் : .............................................................
பதவிப் பெயர் : ...................................................
முகவரி : ........................................................
திகதி : ..........................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

14. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்துப் பார்த்தேன் எனவும்,
2. உத்தியோகத்தர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை

07-138

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2026 ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. (i) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பணிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட் சாரத்திகள் கட்டுப்படல் வேண்டும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை மீறுமிடத்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

03. **பரீட்சைக் கட்டணங்கள்** :

பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும். முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு முதல் அமர்வில் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. அதனைத் தொடரந்து வரும் ஒவ்வொரு அமர்வுக்கும் ஒரு பாடத்துக்கு ரூ.500.00 பரீட்சைகச் கட்டணமும் முழுப் பரீட்சைக்கும் ரூபா 1000.00 பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இந்தப் பரீட்சைக் கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலங்கை வங்கி பத்தரமுல்லை கிளையின் கணக்கிலக்கம் 7041443 க்கு இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்). எக் காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பப்படிவம் :**

விண்ணப்பப் படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் வடிவத்தின் படி தயாரிக் கப்படுதல் வேண்டும். அந்த மாதிரிப் படிவத்திற்கு அமைய A4 அளவிலான தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி 01 இலிருந்து 07 வரையிலான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் எஞ்சியவை அடுத்த பக்கத்திலும் அமையுமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது, பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிக மாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப் பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப் பத்தை தட்டச்சு செய்து தயாரித்துக்கொள்ள முடியு மெனினும் அதனை சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் பூரணப்படுத்தல் வேண்டும். அதற்கமைய தயாரித்துக்கொண்ட விண் ணப்பப்படிவத்தை பரீட்சார்த்திகள் திணைக்களத் தலைவர் ஊடாக 2026.08.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு, குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாயா", பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இன்றேல் நிர்வாகப் பிரிவில் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில்; "அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் தரம் 1 உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்துடன் இணங்குகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். (பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி யொன்றை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

05. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அந்த நோக்கத்திற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனு மொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களின் அடையாளத்தினை நிரூபிக்கும் பொருட்டு தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைக்காது மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும், தமது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். அத்துடன், பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்பாகவும் மண்டபத்தினை விட்டு விலகிச் செல்லும் வரையிலுமான பரீட்சையின் முழு நேரத்திலும் தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைத்தலாகாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பிரகாரம், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகளுக்கு எழுத்துமூலப் பரீட்சைக்காக இலங்கை நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அது தொடர்பில் 0112101553 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு (நிர்வாகம்) அறிவித்தல் வேண்டும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-5980252 அல்லது 011-5980236 ஊடாக வார நாட்களில் வேலை நேரத்தில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை அது தொடர்பில் வினவ முடியும். அவ்வாறு வினவும் போது பரீட்சார்த்தியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் வினவும் ஏதேனும் விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பத்தின் பிரதியினையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியினையும் விண்ணப்பத்தினை அனுப்பிவைத்த பதிவுத் தபாலின் பற்றுச்சீட்டினையும் கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

07. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம், நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தனது அனுமதி அட்டையில் குறித் துரைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவர் மூலம் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே பரீட்சை நிலைய அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரி ஒருவரின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சைத் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாகும். விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் நிகழும் எந்தவித மாற்றங்களும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

09. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை உள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். இதன் பொருட்டு பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது.

10. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். அபேட்சகர் ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஊடக மொழியாக, போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் அரசாங்க சேவையில் நியமனம் பெற்றவர் எனின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் நியமனம் பெற்றிருப்பின் அரசாங்க சேவையில் இணைவதற்காக தகைமை பெற்ற பரீட்சையில் தோற்றிய ஊடக மொழியையும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து பாடங்களுக்கும் ஒரே ஊடக மொழியில் தோற்றுதல் வேண்டும். அத்தோடு விண்ணப்பித்த ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சைத் திட்டம் :**

1. பரீட்சையின் பெயர்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

2. பரீட்சை தொடர்பான விபரம்

| | *பாடம்* | *காலம்* | *மொத்தப் புள்ளி கள்* | *சித்திப் புள்ளி கள்* |
|---|---|---|---|---|
| 01 | சம்பவக் கற்கை | 02 மணித் தியாலங் கள் | 100 | 40% |
| 02 | தாபன விதிக் கோவை, நடை முறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | 02 மணித் தியாலங் கள் | 100 | 40% |

3. பரீட்சையை நடாத்தும் அதிகாரி :

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்

4. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| *பாட இலக் கமும் பாடமும்* | *வினாப் பத்திர த்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | சம்பவக் கற்கை | 1. எல்லைக் கட்டுப்பாடு (Border Control)<br>2. மனித ஆட்கடத்தல் (Human Trafficking)<br>3. மனித வியாபாரம் (Human Smuggling)<br>எனும் பாடங்களுக்கு ஏற்புடைய சம்பவக் கற்கை |
| 02 | தாபன விதிக் கோவை, நடை முறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் | 1. தாபன விதிக் கோவையின் அத்தியாயங்கள் V, VIII, XII, XIV, XV, XVI, XLVII, XLVIII மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்<br>2. நிதி ஒழுங்கு விதிகள் (நி.ஒ.124, 125, 127, 128 மற்றும் 135, நி.ஒ. V, VI, XI அத்தியாயங்கள் மற்றும் VII அத்தியாயத்தின் பகுதி II) மற்றும் கொள்வனவுக்கான அடிப்படைகள் மற்றும் ஏற்பாடுகள் |

குறிப்பு :

* மேலுள்ள பாடங்களுக்கு ஒரே அமர்விலோ அல்லது தனித்தனியாகவோ தோற்ற முடியும்.

* உரிய காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அதன் பின்னர் வரக்கூடிய சம்பள ஏற்றம் பின்போடப்படுவற்கு காரணமாக அமையலாம்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாமை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ.சமிந்த பத்திராஜா,
குடிவரவு மற்றும் குடியகல்வுத்
கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாயா,
பத்தரமுல்லை,
2026, யூன் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026**

**First Efficiency Bar Examination for Authorized Officers Grade I of the Department of Immigration and Emigration - 2026**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதுக)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ...................................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் எழுதுக. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):

.........................................................................................................................................

(உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.)

1.3 முழுப் பெயர் : .........................................................................................................................

(சிங்களத்தில்/ தமிழில்)

02. 2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ………………

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : …………………

(சிங்களத்தில்/ தமிழில்)

2.3 தனிப்பட்ட முகவரி : ………………………………………………………………………………

(சிங்களத்தில்/ தமிழில்)

03. பால்நிலை :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதுக)

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. கையடக்க தொலைபேசி இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. தொலைபேசி இலக்கம் (இல்லம்) : ☐☐☐☐☐☐☐☐☐☐

07. மின்னஞ்சல் முகவரி : ☐

08. தாங்கள் இம்முறை தோற்றும் பாடம் / பாடங்கள்:

| *தொ. இல.* | *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

09. பிறந்த திகதி :
வருடம் : ☐ மாதம் : ☐ திகதி : ☐

10. தற்போது வகிக்கும் பதவி:

10.1 பதவி : ....................................................................................

10.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: ...............................................................

11.11.1 தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையா? ........................................................

11.2 முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றாத விடத்து செலுத்திய பரீட்சைக் கட்டணம்: ..........

11.3 பற்றுச்சீட்டு இலக்கம் : ................................

11.4 திகதி : .............................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் (ஏற்புடையதாயின் மாத்திரம்) பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.) |

12. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவையெனவும் மேலே குறிப்பிட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவன் எனவும் பரீட்சைக் கட்டணம் ரூபா ………………… செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இங்கே ஒட்டப்பட்டுள்ளதெனவும் மேலும், இந்தப் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அனைத்து சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

................................................................

பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி : ................................

(தனது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பம் இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் முன்னால் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்)

13. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் வகுதியைச் சேர்ந்த மற்றும் தனிப்பட்ட ரீதியில் அறிந்த திரு./ திருமதி/செல்வி ......................................................................................... எனது முன்னிலையில் ………… ஆம் திகதி அவரது கையொப்பம் இட்டார் என்பதையும் விதித்துரைத்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

பெயர் : ..............................................................

பதவிப் பெயர் : ....................................................

முகவரி : .........................................................

திகதி : ...........................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

14. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

1. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்துப் பார்த்தேன் எனவும்,
2. உத்தியோகத்தர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை

07-139

**பாதுகாப்பு அமைச்சு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

01. வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிட மாகவுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை யுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

   i. இப்பரீட்சையின் மூலம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கே ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

   ii. எழுத்துப் பரீட்சை - இப்பரீட்சையானது பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

      i. நுண்ணறிவுப் பரீட்சை
      ii. பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள்

02. **பரீட்சை திகதி மற்றும் பரீட்சை நடாத்துதல் :**

03. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

04. நியமிக்கப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஆகும். இறுதி வெற்றிடத்திற்காக அல்லது சில வெற்றிடங்களுக்காக சம புள்ளிகளைப் பெற்ற விண்ணப் பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடங் களின் எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பாக நடைமுறை ஒழுங்குவிதிகள் கோவையின் 92 ஆம் பிரிவிற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளின்படி தீர்மானிக்கப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி வளிமண்டலவியல் பணிப் பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

   i. வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள சதவீதத்திற்குப் போதுமான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உள் வாரி விண்ணப்பதாரர்கள் திணைக்களத்தினுள் இல்லாதிருந்தால் மாத்திரமே, எஞ்சிய எண்ணிக் கையானது திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் வெளிவாரி விண்ணப்ப தாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

05. **சேவை நிபந்தனைகள் :**

5.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், நிறுவனக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங் களுக்கும், 2022.12.14 ஆம் திகதியிட்ட 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், 2015.09.01 ஆம் திகதியிட்ட இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அவ்வாட் சேர்ப்புத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படவிருக்கின்ற திருத்தங் களுக்கும் உட்பட்டு, தெரிவு செய்யப்படும் விண்ணபதாரர் ஒருவர் இப்பதவியின் வகுப்பு III இற்கு நியமிக்கப்படுவார்.

5.2 இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டது. உங்களுக்குரிய ஓய்வூ தியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/விதவையர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப் போது தீர்மானிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கமைய அதற்கான பங்களிப்புப் பணத்தை நீங்கள் செலுத்துதல் வேண்டும்.

5.3 இந்த நியமனம் 03 வருட நன்னடத்தக்காலத்திற்கு (Probation Period) உட்பட்டதாகும். தொலைத் தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத் திறமைக் காண் தடைத்தாண்டல் (Efficiency Bar) பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்குரிய அநுபந்தச் சுற்றறிக்கைகளுக் கமைய, குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சி யினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் அல்லது நியமிக்கப்பட்ட பதவியொன்றின் கடமைகளைப் பொறுப்பேற்க மறுக்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு வளிமண்டல வியல் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

05. **மாதாந்த சம்பளப் பரிமாணம் :**

இப்பதவிக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் MN-3 சம்பளக் கட்டம் பொருந்தும். அச்சம்பளக் கட்டத்திற்குரிய சம்பளப் பரிமாணம் பின்வருமாறு அமையும்.

ருபா 52,250.00 – 10x800 – 11x1,190 – 10x1,320 - 10x1,350 - 100,040.00

(2025.03.25 ஆம் திகதியிட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 10/2025 இன் விதிகளுக்கு அமைவாக, அதன் அட்டவணை II இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு ரூ. 52,250.00 இற்குரிய ஆரம்பப் படியில் வைத்து சம்பளம் வழங்கப்படும்)

06. ஆட்சேர்ப்புத் தகைமைகள் :

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) நன்மதிப்பைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
(iii) இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் மனத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் / தொழில்முறைத் தகைமைகள்

i. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ் ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்குச் திறமைச் சித்தியுடன் (Credit Pass) ஒரே தடவையில் (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல்.

மற்றும்

ii. ஒரே தடவையில் க.பொ.த. (உயர்தர) பரீட் சையில் 03 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். பாடங்களின் சேர்க்கை பின்வரும் ஏதேனும் ஒரு வகையாக இருத்தல் வேண்டும்.

(1) பௌதிகவியல், தூய கணிதம் மற்றும் பிரயோக கணிதம்
(2) பௌதிகவியலுடன்

(i) தூய கணிதம் / பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் ஆகிய பாடங் களில் ஏதேனும் ஒன்று

மற்றும்

(ii) இரசாயனவியல் / விவசாய விஞ் ஞானம் Times New Roman தகவல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்று

மற்றும்

iii. தொழில் துறைக்குரிய தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 6 தகைமையினைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

iv. மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப் படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

v. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா

அல்லது

vi. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா

அல்லது

vii. திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

viii. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாம் பாகத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

ix. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றி தழ்களை வழங்கிய நிறுவனங்களிடம் வினவி ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர், மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதத் திலும் சமனானது என மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்ப தகை மைகளைக் கொண்டிருத்தல்.

(இ) **வயது** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று குறைந்தபட்ச வயது 18 ஆவதுடன், அதிகபட்ச வயது 30 ஆகும். (அதற்கமைய, 2008.08.13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் மற்றும் 1996.08.13 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த திகதி யைக் கொண்டவர்கள் மாத்திரமே இதற்கு விண் ணப்பிப்பதற்குத் தகைமையுடையவர்களாவர்.)

(ஈ) **தகைமைகள் பற்றிய கட்டுப்பாடுகள் :**

i. மத ரீதியான துறவறம் பூண்டுள்ள எவரும் விண்ணப்பிப்பதற்கோ அல்லது தோற்றுவதற்கோ அனுமதி இல்லை.

ii. இப்பரீட்சைக்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது, ஆன்லைன் அமைப்பினால் (Online System) வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தல் முறைகளின் கீழ் மாத்திரமே செலுத்த வேண்டும்

i. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி கட்டண வசதியைக் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions))

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறைமை (Online Banking Method “Flex App” of Bank of Ceylon))

iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும் Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கூறிய முறைகளின் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள், இணையத்தளத்தில் தேர்வு தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரம் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் அறிவிக்கப்படும். தேர்வுக்கான முழுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், தேர்வுக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகளின் மூலம் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் பிழைகளுக்கு இலங்கைத் தேர்வுத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) தேர்வுக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது அல்லது வேறு எந்தவொரு தேர்வுக்காகவும் மாற்றீடு செய்யப்பட மாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Application – Recruitment Exams/E. B Exams” என்பதனூடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஆன்லைன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஓகத்து மாதம் 13 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

8.2 விண்ணப்பதாரர்கள் தங்களது தனிப்பட்ட கோப்பில் (Personal File) இணைப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

8.3. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது இறுதி நாள் வரை தாமதிப்பதனால் ஏற்படும் எவ்விதமான பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரரே எதிர்கொள்ள வேண்டும்.

8.4 ஆன்லைன் (Online) தேர்வு விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி (Soft copy) செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது, அமைப்பிற்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அறிவிக்கப்படும். ஆன்லைன் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரிகையை (Instruction) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அந்த அறிவுறுத்தல்களைத் திட்டவட்டமாகப் பின்பற்றுங்கள். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எவ்வித திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்பட

மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் தேர்வு அனுமதி அட்டைகள் ஆன்லைன் (Online) மூலம் மாத்திரமே வெளி யிடப்படும். தேர்வு அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைத் தேர்வுத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையதள அறிவித்தல் மூலம் அல்லது விண்ணப் பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். தங்களது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைத் தேர்வுத் திணைக்களத்தின் நிறுவன ரீதியான தேர்வு ஏற்பாட்டுக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த தேர்வின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், தேர்வுத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் போதிய கால அவகாசத்துடன் தேர்வுத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். தேர்வு மண்டபத்திலோ அல்லது நேர்முகப்பரீட்சையின் போதோ திருத்தங்கள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

8.6. தேர்வுக்கான அனுமதி அட்டையில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர், தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதவியணி அதிகாரியைக் கொண்டும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரச பாடசாலை யொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நோட்டாரி அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்ட ஒருவரைக் கொண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்

## 09. தேர்வுக்குத் தோற்றுதல் :

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மண்டபத்திலேயே தேர்வுக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேர்வு அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி, முதன்முறையாக அந்த மண்ட பத்தில் தோற்றும் நாளில், அதனை அங்குள்ள தேர்வு மண்டப பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். தமது கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு அனுமதி அட்டை இல்லாமல் தேர்வுக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளின் தொகுப்பு இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால், தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். தேர்வு முடிவுகள் தொடர்பாக தேர்வு ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மான மாகும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு தேர்வு அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் தேர்வுக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகைமை களைப் பூர்த்தி செய்துள்ளதற்கோ ஆன ஒரு அங்கீ காரமாகக் கருதப்படக் கூடாது.

## 10. விண்ணப்பதாரர்களின் அடையாளம் :

விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லு படியாகும் :

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அத்துடன், பரீட்சை விண்ணப்பதாரர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மறைக்காமலும், மின்னணு தகவல் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் எவரும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

11. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை** :

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாகவும் துல்லியமாகவும் தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதிகளுக்கமைய ஏதேனும் ஒரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் தவறானது என தெரிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கிய தகவலை அவர் திட்டமிட்டு மறைத்திருப்பது தெரியவந்தால், அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழி** :

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப் படமாட்டார் .

13. **ஆட்சேர்ப்பு முறை** :

I. **எழுத்து மூலப் பரீட்சை** :

இவ்வறிவித்தலின் 01 ஆம் பந்தியின் (ii) ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட 02 வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு குறைந்த பட்சம் 40% புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

விடயங்கள் : 01. நுண்ணறிவுப் பரீட்சை

02. பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் -

**எழுத்து மூலப் பரீட்சையின் பாடத்திட்டம்**

| *பாடம் இலக்கம்* | *பாடம்* | *ஒதுக்கப் பட்ட நேரம்* | *புள்ளி கள்* | *சித்திப் புள்ளிகள் (குறைந்த பட்சம்)* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

(அ) **நுண்ணறிவுப் பரீட்சை** :

இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, 50 பல்தேர்வு மற்றும் குறுந்தொகுப்பு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருப்பதுடன், அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) **பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் :**

இவ்வினாத்தாளானது பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் பாடங்கள் தொடர்பாக க.பொ.த. (உயர்தர) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான இயக்கவியல், அலகுகளும் பரிமாணங்களும், பதார்த்தத்தின் இயல்புகள், அதிர்வுகளும் அலைகளும், வெப்பமும் மின்சாரமும், மின்சாரக் கொள்கைகள், அரைகடத்திகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், பல்வேறு தகவல் தொடர்பு மற்றும் தரவுப் பரிமாற்ற முறைகள் ஆகியன குறித்த விண்ணப்பதாரரின் அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

02. **நேர்முகப் பரீட்சை** :

(அ) எழுத்துப் பரீட்சையின் அனைத்து வினாத் தாள் களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் குறைந்த பட்சம் 40% புள்ளி களைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து, முன்னுரிமை அடிப் படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் விண்ணப்பதாரர்களின் அடிப்

படைத் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**கவனிக்கவும்** : நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதானது நியமனத்தை வழங்குவதற்கான தகைமை களைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

14. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, பொது நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களின் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினரை உள்ளடக்கித் தயாரிக் கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் பரீட்சை ஆணை யாளர் நாயகத்தினால் வளிமண்டலவியல் பணிப் பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். அதன் பின்னர், வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் உடன்பாடு பெறப்பட்டதும், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேற்று ஆவணமொன்றைத் தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

15. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பாக வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமையச் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

16. இந்நிவேதனத்தின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கப்பாடற்ற தன்மைகள் காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள ஊடக அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு செயற்பட வேண்டும்.

ஏ. எல். கே. விஜேமான்கே,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்
பௌத்தாலோக்க மாவத்தை
கொழும்பு 07,
2026.07.06.

07-196/1

## பாதுகாப்பு அமைச்சு

## வளிமண்டலவியல் திணைக்களம்

## இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி வகுப்பு III / பயிற்சி வகுப்பு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2026

01. வளிமண்டலவியல் திணைக்களத்தில் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி (வகுப்பு III / பயிற்சி வகுப்பு) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட் சைக்கு, தகைமைகளைக் கொண்ட வளிமண்டல வியல் திணைக்களத்தின் உள்வாரி விண்ணப்பதாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

    i. இவ்விளம்பரத்தின் மூலமான ஆட்சேர்ப்பானது, வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு III / பயிற்சி வகுப்பைச் சேர்ந்த தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி பதவிக்காக மாத் திரமே மேற்கொள்ளப்படும்.

    ii. **எழுத்து மூலப் பரீட்சை :** இப்பரீட்சையானது பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும்.

        i. நுண்ணறிவுப் பரீட்சை
        ii. பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத் தாள்

02. ***பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சை நடாத்துதல் :***

இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

03. நியமிக்கப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண் ணிக்கை 02 ஆகும். இறுதி வெற்றிடத்திற்காக அல்லது சில வெற்றிடங்களுக்காக சம புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்களின் எண்ணிக் கையை விட அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், அவ் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நடைமுறை ஒழுங்குவிதிகள் கோவையின் 92 ஆம் பிரிவின் பிரகாரம் அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு இணங்க தீர்மானிக்கப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத் தினால் தீர்மானிக்கப்படும்.

    i. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய சதவீதத்திற்குப் போதுமான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உள்வாரி விண்ணப்பதாரர்கள் திணைக்களத்தினுள் இல்லாதிருந்தால் மாத்திரமே, எஞ்சிய எண்ணிக்கையானது திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

04. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், நிறுவனக் கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 2022.12.14 ஆம் திகதியிட்ட 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக் கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், 2015.09.01 ஆம் திகதியிட்ட இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதி களுக்கும் நிபந்தனைகளுக்கும், அவ்வாட் சேர்ப்புத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படவிருக்கின்ற திருத்தங்களுக்கும் உட் பட்டு, தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் இப்பதவியின் வகுப்பு III இற்கு நியமிக்கப் படுவார்.

4.2 இந்நியமனமானது நிரந்தரமானதும் ஓய்வூதியத் திட்டத்திற்கு உட்பட்டதுமாகும். உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / விதவகைள், தபு தாரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் ஒழுங்கின்படி, நீங்கள் அதற் கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

4.3 பதவியில் நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர், நிய மனத் திகதியிலிருந்து 01 வருடக் காலப்பகுதி யைக் கொண்ட தகுதிகாண் காலம் / வேலை பார்க்கும் காலப்பகுதிக்கு உட்பட வேண்டும். தொலைத்தொடர்பு மற்றும் ரேடார் தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

4.4 அரசகரும மொழிப் பாண்டித்தியமானது, அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 18/2020 இற்கும் அதற்கு அத்தியாவசியமான இணைச் சுற்றறிக் கைகளுக்கும் அமைவாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

4.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவியொன்றின் கடமை களைப் பொறுப்பேற்பதற்கு மறுக்கும் விண்ணப்ப தாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

05. **மாதாந்த சம்பளப் பரிமாணம் :**

இப்பதவிக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் MN-3 சம்பளக் கட்டம் பொருந்தும். அச்சம்பளக் கட்டத்திற்குரிய சம்பளப் பரிமாணம் பின்வருமாறு அமையும்.

ருபா 52,250.00 – 10 x 800 – 11 x 1,190 – 10 x 1,320 - 10 x1,350 - ருபா 100,040.00 (2025.03.25 ஆம் திகதி யிட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 10/2025 இன் விதிகளுக்கு அமைவாக, அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ. 52,250.00 இற்குரிய ஆரம்பப் படியில் வைத்து சம்பளம் வழங்கப்படும்)

06. **ஆட்சேர்ப்புத் தகைமைகள் :**

6.1 பயிற்சி வகுப்பிற்காக (ஒரு வருடப் பயிற்சி)

(அ) (i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்மதிப்பைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் மனத் தகைமையைக் கொண் டிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் / தொழில்முறைத் தகை மைகள்

i. மொழி அல்லது இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் (Credit Pass) இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் பதவிக்குரிய துறையிலான பாடநெறியொன்றை வெற் றிகரமாகப் பூர்த்தி செய்து, தேசிய தொழில் நுட்பச் சான்றிதழைப் (NTC) பெற்றிரு த்தல் வேண்டும்.

அல்லது

iii. மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் வடிவமைப்புத் தொழில்நுட்பம் (Draftsmanship) தொடர் பான ஒரு வருட முழுநேரப் பயிற்சிப் பாட நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

iv. மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் பதவிக் குரிய துறையிலான கைத்தொழில் தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான் றிதழ் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

v. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பச் சான்றி தழ்களை வழங்கிய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற் றுக்கொண்டதன் பின்னர், மேலே குறிப் பிடப்பட்ட தொழினுட்பத் தகைமைகளு க்கு அனைத்து விதத்திலும் சமனானது என மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழினுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **அனுபவம்** :

i. ஆரம்பக் கைவினைச் சாராத (Primary Non-Skilled) அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகையிலான அதற்குரிய துறையிலான நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் செயற்திறனான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு)

(அ) கல்வித் தகைமைகள் / தொழில்முறைத் தகை மைகள்

i. மொழி அல்லது இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் (Credit Pass) இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

மற்றும்

ii. வேலைவாய்ப்புத் துறையுடன் தொடர்பு டைய தேசிய தொழிற்துறைத் தகைமை (NVQ) மட்டம் 6 தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

iii. மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT)

அல்லது

iv. தேசிய இத்தொழில் பயிற்சி மற்றும் கைத்தொழில்பயிற்சிஅதிகாரசபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறி யியல் டிப்ளோமா (NDES)

அல்லது

v. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (HNDEST)

அல்லது

vi. திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

vii. இலங்கை பொறியியலாளர் நிறுவனத் தினால் (IESL) நடாத்தப்படும் பொறி யியல் பரீட்சையின் முதலாம் பாகத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

viii. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழினுட்பச் சான்றி தழ்களை வழங்கிய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற் றுக் கொண்டதன் பின்னர், மேலே குறிப் பிடப்பட்ட தொழினுட்பத் தகைமை களுக்கு அனைத்து விதத்திலும் சமனானது என மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழினுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவம்** :

i. ஆரம்ப (Primary) அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகையிலான நிரந்தர திணைக்களப் பதவி யொன்றில் அதற்குரிய துறையி லான குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் செயற்திறனான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத் தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **வயது** : பொருந்தாது.

(ஈ) **தகைமைகளுக்கான எல்லைகள் / நிபந்தனைகள் :**

i. இந்தத் தேர்வுக்கான அனைத்துத் தகுதிகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது, ஆன்லைன் அமைப்பினால் (Online system) வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தல் முறைகளின் கீழ் மாத்திரமே செலுத்த வேண்டும்

i. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி கட்டண வசதியைக் கொண்ட ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறைமை (Online Banking Method " Flex" App of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலமும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கூறிய முறைகளின் மூலம் பணம் செலுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள், இணையதளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) பணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரம் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (Email) மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய கட்டண முறைகளின் மூலம் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படும் பிழைகளுக்கு இலங்கைத் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது அல்லது வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றீடு செய்யப்பட மாட்டாது.

08. **விண்ணப்பிக்கும் முறை:**

8.1 இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைத் தேர்வுத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் "our services" என்பதன் கீழ் உள்ள "Online Application – Recruitment Exams/E. B Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஆன்லைன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2026, யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

8.2 விண்ணப்பதாரர்கள் தங்களது தனிப்பட்ட கோப்பில் (Personal File) இணைப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன் றையும் சேவை உறுதிப்படுத்தல் கடிதத் தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

8.3 விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது இறுதி நாள் வரை தாமதிப்பதனால் ஏற்படும் எவ்விதமான பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரரே எதிர்கொள்ள வேண்டும்.

8.4 ஆன்லைன் (Online) தேர்வு விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி (Soft copy) செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என்பது, அமைப்பிற்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அறிவிக்கப்படும். ஆன்லைன் விண்ணப்பப் படிவத் தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரிகையை (Instruction) பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அந்த அறிவுறுத்தல்களைத் திட்டவட்டமாகப் பின்பற்றுங்கள். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் செய்யப்படும் எவ்வித திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே

விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் ஆன்லைன் (Online) மூலம் மாத்திரமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைத் தேர்வுத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையதள அறிவித்தல் மூலம் அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். தங்களது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைத் தேர்வுத் திணைக்களத்தின் நிறுவன ரீதியான பரீட்சை ஏற்பாட்டுக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த தேர்வின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், தேர்வுத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் போதிய கால அவகாசத்துடன் தேர்வுத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப்பரீட்சையின் போதோ திருத்தங்கள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

8.6 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர், தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதவியணி அதிகாரியைக் கொண்டும், ஏனைய விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பத்தை பிரிவின் கிராம உத்தியோகத்தர், அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நோட்டாரி அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்தைக் கொண்ட ஒருவரைக் கொண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்

09. **தேர்வுக்குத் தோற்றுதல் :**

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வு மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி, முதன்முறையாக அந்த மண்டபத்தில் தோற்றும் நாளில், அதனை அங்குள்ள தேர்வு மண்டப பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். தமது கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு அனுமதி அட்டை இல்லாமல் தேர்வுக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளின் தொகுப்பு இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவ் விதிமுறைகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதற்கோ ஆன ஒரு அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

10. **விண்ணப்பதாரர்களின் அடையாளம் :**

பரீட்சை விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை ஓட்டுநர் உரிமம்

மேலும், பரீட்சை விண்ணப்பதாரர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், மின்னணு தகவல்

தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் எவரும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருக்க வேண்டும்.

11. **தவறான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை** :

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் அவதானமாகவும் துல்லியமாகவும் தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சை விதிகளுக்கு அமைவாக விண்ணப்பதாரர் ஒருவர் தகுதியற்றவர் என பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பதாரர் தகைமை இரத்து செய்யப்படலாம். விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தகவல் தவறானது எனத் தெரிந்தே சமர்ப் பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டால், அல்லது ஏதேனும் ஒரு முக்கிய தகவலை அவர் தெரிந்தே மறைத்திருந்தால், அவரது நியமனத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழி** :

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும்

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி

மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

13. **ஆட்சேர்ப்பு முறை** :

I. **எழுத்து மூலப் பரீட்சை :**

இவ்வறிவித்தலின் 01 ஆம் பந்தியின் (ii) ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களைக் கொண்ட 02 வினாத்தாள்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையொன்று நடத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு குறைந்தபட்சம் 40% புள்ளிகள் வீதம் பெறப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

விடயங்கள் :

01. கணிதம் பற்றிய அடிப்படை அறிவு வினாத்தாள்
02. பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள்

**எழுத்து மூலப் பரீட்சையின் பாடத்திட்டம்**

| *பாடம் இலக்கம்* | *பாடம்* | *ஒதுக்கப் பட்ட நேரம்* | *புள்ளி கள்* | *சித்திப் புள்ளிகள் (குறைந்த பட்சம்)* |
|---|---|---|---|---|
| 01 | கணிதம் பற்றிய அடிப்படை அறிவு வினாத்தாள் | 02 மணித்தி யாலங்கள் | 100 | 40% |
| 02 | பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் | 02 மணித்தி யாலங்கள் | 100 | 40% |

(அ) **கணிதம் பற்றிய அடிப்படை அறிவு வினாத்தாள்** :

இயற்கணிதம், வடிவவியல், திரிகோணமிதி தொடர் பான க.பொ.த. (சாதாரண தரம்) மட்டத்திலான

I. 40 பலதேர்வு வினாக்கள். (புள்ளிகள் 2.5 x 40 = 100)
II. கட்டுரை வடிவிலான விடைகள் எதிர்பார்க்கப் படும் வினாத்தாளைக் கொண்டதுடன், 07 வினாக்களுள் 05 வினாக்களுக்கு விடை யளிக்க வேண்டும். (புள்ளிகள் 20 x 5 = 100)

(ஆ) **பாடவிதானம் சார்ந்த தொழில்நுட்ப வினாத்தாள் :**

பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் ஆகிய பாடங் களுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான மின்சாரக் கோட்பாடுகள், அரைக்கடத்திகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், பல்வேறு தொடர்பாடல் மற்றும் தரவுப் பரிமாற்ற முறைகள் தொடர்பாக விண்ணப்பதாரரின் அறிவை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டதாக அமையும்.

02. **நேர்முகப் பரீட்சை :**

(அ) எழுத்து மூலப் பரீட்சையின் அனைத்து வினாத் தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத் தாளுக்கும் 40% இற்குக் குறையாமல் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுள் முன்னுரிமை அடிப் படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படுவர்.

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக் கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் விண்ணப் பதாரர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட் சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப் படமாட்டாது.

**கவனிக்கவும்** : நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதானது நியமனத்தை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

14. எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்து, சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களின் எழுத்து மூலப் பரீட்சைப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையிலானவர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். அதன் பின்னர், வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கப்பாடு பெறப்பட்டதும், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேற்றுப் பத்திரமொன்றைத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

15. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பாக வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமையச் செயற்படுவதற்குக் கட்டுப்பட்டவர்களாவர்.

16. இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கப்பாடற்ற தன்மைகள் காணப்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள ஊடக அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு செயற்பட வேண்டும்.

ஏ. எல். கே. விஜேமான்கே,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2026.07.06.

07-196/2